உ

கடவுள்துணை.

# செந்தமிழ்.

மதுரைத் தமிழ்ச்சங்கத்து மாதந்தோறும் பிரசுரமாகும்
ஒரு தமிழ்ப்பத்திரிகை.


பத்திராசிரியர்.— { ரா. இராகவையங்கார்,
ஸேது ஸம்ஸ்தான வித்வான்.


எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்—திருவள்ளுவர்.

---


தொகுதி-உ.] சோபகிருது-ஹு பங்குனிமீ [பகுதி-ரு.


---

உள்ளுறை.


வெள்ளிவீதியார்.—பத்திராசிரியர். கசசு

இலக்கணவாராய்ச்சி.—அ. குமாரசுவாமிப்பிள்ளை. கடுஅ

ஆகுபெயரன்மொழித்தொகை ஆராய்ச்சி.— } நா. வேதாசலம்பிள்ளை. கசுச

பல்லவசக்கரவர்த்திகள்.—ம. ஸ்ரீநிவாஸையங்கார். களங

சிலப்பதிகாரமணிமேகலைக ளின்பிறப்பிடம் யாது?— } தா. பொன்னம்பலம்பிள்ளை. எம். ஆர். ஏ. எஸ். களசு

கவிமரபு.—சுந்தரராஜசர்மா. கஅடு

புத்தகக்குறிப்பு.—பத்திராசிரியர் கஅசு

அநுமானவிளக்கம்.—திரு. நாராயணையங்கார். ஙங

பன்னிருபாட்டியல் (மூற்றும்).— ஙங

திணைமாலை நூற்றைம்பது.—கணிமேதாவியார். உடு



மதுரை:

தமிழ்ச்சங்க முத்திராசாலைப்

பதிப்பு.

வருஷம் ஒன்றுக்கு ரூ-4.] 1904. [தனிப்பிரதி அணா-8.

உ

திருச்சிற்றம்பலம்.

# அறிவிப்பு.

ஸ்ரீ சேதுஸம்ஸ்தானவரலாற்றினைப், பழைய சிலாசாஸனங்களையும், தாமிரப்பட்டயங்களையும், புலவர் பாடல்களையும், அவ்வரலாறு குறித்துள்ள பழைய ஏடுகளையும், தேவஸ்தானம், ஸத்ரம், தர்மாஸனம், தர்மமகிமை, சாரிமகிமை, முதலியவற்றிற்குரிய பழைய கணக்குகளையும், இதுகாறும் அவ்வரலாறுபற்றி வெளிவந்துள்ள நூல்களையும் பிறவற்றையும் பெருங்கருவியாகக்கொண்டு நன்காராய்ந்து சரித்திரமுறைபின்வைத்துச் 'சேதுபதி சரிதை' என்னும் பெயரான் இச்சங்கத்தினின்று, யாம் வெளியிடக்கருதி அதற்குத் தக்கவாறு முயன்று வருதலால் அத்தகைப்பட்டயங்களும் பாடல்களும் ஏடுகளும் உடைய நல்லோர் தாம் அவ்வாறுடையவற்றை எமக்கறிவிப்பின் அவற்றைப் பிரதிசெய்து கோடற்கு வேண்டுவன விரைந்து புரியலாகுமென்று அறிவிக்கின்றேம்.

இங்ஙனம்,

பொ. பாண்டித்துரை,

அக்கிராசனாதிபதி.

மதுரைத் தமிழ்ச் சங்கம்.

# அறிவிப்பு.

நம் தமிழ்ச்சங்கத்தாரால் 1903௵ நவம்பர் டிசம்பர் மாதங்களில் நடத்தப்பெற்ற மெட்ரிக்குலேஷன், எப். ஏ. பி. ஏ. வகுப்புப் பரீக்ஷைகளிற் றேறிய மாணாக்கர்க்கு அளிக்கப்பெறும் பரிசு யோக்கியதாபத்திரங்களை, 1904-௵ மே௴ 24, 25, 26 தெய்திகளில் நடைபெறும் சங்கவருஷோற்சவத்துக் கூடும் சபையாரறியப் பிரஸித்தஞ்செய்து, அவ்வம்மாணாக்கர்க்குரியவற்றை, அவரவர் கற்ற கலாசாலைத் தலைமை உபாத்தியாயர் மூலமேனும், மாணாக்கர் கடித மூலந் தெரிவிக்கும் விலாசத்துக்கேனும் தாமதமின்றி அனுப்பப் பெறுமென்பதை இதன்மூலம் அறிவிக்கின்றேன்.

இங்ஙனம்,

எம். வி. சுப்பிரமணிய ஐயர்,

மதுரைத் தமிழ்ச்சங்க மானேஜர்.

உ

கடவுள் துணை

# செந்தமிழ்.

தொகுதி-௨.] சோபகிருது௵ பங்குனி௴ [பகுதி-௫.

## வெள்ளிவீதியார்.

இவர் பெண்பாலார் என்பதும் நல்லிசைப்புலமையுடையார் என்
பதும் நச்சினார்க்கினியர் “மக்க ணுதலிய வகனைந் திணையுஞ், சுட்டி
யொருவர் பெயர்கொளப் பெறாஅர்” என்னுந் தொல்காப்பியவகத்
திணையியற் சூத்திரவுரையில்,

“கன்று முண்ணாது கலத்தினும் படாஅது
நல்லான் றீம்பா லிலத்துக் காஅங்
கெனக்கு மாகா தென்னைக்கு முதவாது
பசலை யுணீஇய வேண்டுந்
திதலை யல்குலென் மாமைக் கவினே’ — (குறுந்தொகை-௨௫)

இது வெள்ளிவீதியார் பாட்டு. ‘மள்ளர் குழீஇய.... மகளே’ இது
காதலற் கெடுத்த ஆதிமந்திபாட்டு. இவை தத்தம் பெயர் கூறிற்
புறமாம் என்றஞ்சி வாளாது கூறினார்” எனக்கூறியவாற்றான் நன்
குணரலாகும். தம்பெயர் கூறிற் புறமாமென்றஞ்சி வாளாது கூறிய
இச்செய்யுள் பெண்பாற் கூற்றாதலுங்கண்டுகொள்க. ஔவையார்
பாடியருளிய ‘ஓங்குமலைச்சிலம்பின்’ என்னும் அகப்பாட்டில் (௧௪௭)
‘நெறிபடு கவலைய நிரம்பா நீளிடை, வெள்ளி வீதியைப் போல நன்
றுஞ், செலவயர்ந் திசினால் யானே’ என்பதனாற் செலவுணர்த்திய
தோழிக்குத் தலைமகள் நிரம்பா நீளிடையில் யானும் வெள்ளிவீதி
யைப்போலச் செல்லத்துணிந்தேன் எனக்கூறியவாற்றானும், நச்சி
னார்க்கினியர் ‘இதனுள் வெள்ளிவீதியைப்போலச் செல்லத்துணிந்து
யான் பலவற்றிற்கும் புலந்திருந்து பிரிந்தோரிடத்தினின்றும் பிரிந்த
பெயர்வுக்குத் தோணலந்தொலைய உயிர்செலச்சாஅய் இரங்கிப்பிறிது
மருந்தின்மையிற் செயலற்றேனென மிகவும் இரங்கியவாறு மெய்ப்

பாடுபற்றியுணர்க.' (தொல்-பொ-அகத்-கரு) எனக்கூறியவாற்று னும் இவர் தமதருமைத்தலைவனைப் பிரியநேர்ந்துழித் தமித்துயிர் வாழ்தலாற்றாது அவனுடனுறை வேட்கையேமீதூர்ந்து அவன் சென்றுழிச் செல்லவேண்டிக் காடும்பிறவுங் கடந்துசென்றனரென்பது உய்த்துணரப்படுவது. 'முந்நீர் வழக்க மகடூஉவோ டில்லை' (தொல்-பொ-அகத்-௩௪) என்னும் புலனெறி வழக்கிற்குமாறாய்த் தலைவனை பிரிந்துறையலாற்றா உழுவலன்பால் அறிவிற் சிறந்த பெருந்தகை மகளார் ஒருவர் நிகழ்த்திய அருஞ்செயலாதலின், ஒளவையார் என்னும் அருந்தமிழ்ச் செல்வியார், கற்பின்பாற்றலைவி பிரிந்ததலைவன் பாற் செல்லத்துணிந்தமைக்கு எடுத்துக்காட்டினாராவர். இவர் புலனெறி வழக்கெலாமுணர்ந்த நல்லிசைப்புலமை மெல்லியலாராயிருந்தும் தம்தலைவன்மாட்டுவைத்த அன்பு மிகுதியான் அவற்றையிகந்து அவன்பாற் செல்லத்துணிந்தமையானே இஃதெடுத்தாளப்பட்டதாகும். இவ்வெள்ளிவீதியார் பாடல்களுட் பெரும்பான்மையாகப் பிரிவு பற்றி வருவனவெல்லாம் இவர்தம் தலைவனைப் பிரிந்தகாலத்துப் பாடியனவேயாம். புலனெறி வழக்கினாற் பிரிவுடன்பட்டும் ஆற்றலாகாப் பிரிவுத்துயரான் அறிவு மயங்கி அவனைக்காண்டல் வேட்கையேமீதூர்ந்து பெரும்பாலைவனமெல்லாஞ் செல்லத்துணிந்த இவரது அரிய பெரிய அன்பின்றகைமை யாவரானறியலாவது. 'அன்பெனப தொன்றின் றன்மை யமரரு மறிந்த தன்றால்' என்றார் கம்பநாடரும். அயோத்தியரிறைபின்னே வைதேகி என்றுரைக்கும் அன்னநடைஅணங்கு காடெலாநடந்ததும், இத்தமிழ்நாட்டுக்கண்ணகி என்னும் கற்புடையாட்டி கோவலன்பின் சென்றதும் இப்புலனெறி வழக்கிற்குமாறாயினும் அன்பின்றகைமையான் ஆன்றோரெல்லாரானும் புகழ்ந்து பாராட்டப்படுதல்போல, இதனையுங்கொள்க. இதனையொட்டியாராய்வுழி மேற் றம்பெயர் கூறிற் புறமாமென் றஞ்சி வாளாது கூறிய 'கன்றுமுண்ணாது' என்னுஞ்செய்யுள் இவர் தம்தலைவன்பிரியலுற்றபோது தம்மையும் உடன்கொண்டு செல்லாமைக்குக் கவன்றுபாடியதாக உய்த்துணரப்படும். இனித்தலைவிகற்பினுட்பிரிவாற்றாது எம்மையும் உடன்கொண்டு சென்மினெனக் கூறுவனவும் உண்டென்பது முற்குறித்த 'முந்நீர்வழக்கம்' என்பதற்கு நச்சினார்க்கினியருரைநோக்கி யறிக. 'என்னீரறியாதீர்போலவிவை

கூறி, னின்னீர வல்ல நெடுந்தகா யெம்மையு, மன்பறச் சூழாதே யாற்றிடை நும்மொடு, துன்பந் துணையாக நாடி னதுவல்ல, தின்பமு முண்டோ வெமக்கு’ (கலித்தொகை) என்றுதலைவி கூறுமாற்றானு ணர்க. இவ்வாறு தலைவிகூறுவன தலைவன் செலவழுங்குதற்குக் காரணமாவனவல்லது உடன்கொண்டு சேறற்காவனவில்லை என்பர். இவர் அவ்வாறன்றித் தலைவன்பாற் செல்லவேண்டி நெறிபடுகவலைய நிரம்பாநீளிடையினுஞ் சென்றமையானே அருமைபற்றி இவர்பெருஞ்செயல் எடுத்தாளப்பட்டதாகு மென்பது தெள்ளிது. இனி இவர் தலைவனுடன் செல்லவேண்டினரல்லது அவன்பிரிந்தபின்பு அவன் பாற் செல்லத் துணிந்தனரில்லை யெனின்;— அஃது எல்லா மகளிர்க்கும் ஒத்தலான் இவரது செயலொன்றையே சிறப்பித்து “வெள்ளி வீதியைப் போல நன்றுஞ், செலவயர்ந் திசினால் யானே” எனக் கூறார் என்க.

இனி இவர் தந்தலைவனைப் பிரியலுற்றுழிப் பாடியருளிய இக் ‘கன்றுமுண்ணாது’ என்னுஞ்செய்யுளொன்றே இவரது நல்லிசைப் புலமையினை நன்குபுலப்படுத்தும். இது சொல்லானும் பொருளானும் சுவை பெரிது பயப்பதென்பது ஆய்ந்தறியத்தக்கது. கன்று வயிறாரவுண்டபின்னே கலத்திற் கறத்தல் அறமென்னுங்கருத்தாற் கன்றுண்டலைமுன்னுங் கலத்திற்படுதலைப்பின்னும் வைத்தோதினர். ‘கறவைகன் றார்த்திக் கலநிறை பொழியும்’ எனமணிமேகலைதுறவினும் (அறவணர்த்தொழுதகாதை) ‘கன்றருத்தி மங்கையர் கலநிறை பொழிதர’ எனச்சிந்தாமணியினும் (நாமகள்-௪௦) கூறுதல்காண்க. ‘*விடுநில மருங்கிற் படுபுல் லார்ந்து, நெடுநில மருங்கின் மக்கட் கெல்

*மணிமேகலை ஆபுத்திரன்திறமறிவித்தகாதை. விடுநிலம்-மக்களால் விளைவிக்குதவாமல் விடப்பட்டநிலம். படுபுல்-ஒருவர் முயற்சியானன்றித் தானே யுண்டாயபுல். அப்புல்லும் விளைத்தாற்போல யாண்டும் ஒத்துண்டாகாமையான் மருங்கின் என்றார். ஆர்ந்து-ஒருவர் கொணர்ந்திடுதலின்றித்தானே சென்று மேய்ந்து எ-று. நெடுநிலமருங்கின் மக்களென்றதனால் அங்ஙனம் விட்டநிலமும் மிகச்சிறிதாதலறியப்படும்: மக்கட்கெல்லாமென்றது குழவி முதியோளிறுதியாக எல்லாமக்கட்கும் எ-று. பிறந்தநாட்டொட்டு-அம்மக்கடோன்றிய நாட்டொடங்கி. இதனாற் சாந்துணையும் என்பது கூறாமலுணரப்படும். கொலையுந் துன்பமுமில்லாமல் எய்தவருந் தீவியஉணவாதலாற் சிறந்ததன்றீம்பால் என்றார். தான் புல்லையுண்டும் பிறர்க்கு இனிய பாலை யளித்தலின் அறந்தரு நெஞ்சோடருள்சுரந்தூட்டும் என்றார் எனவுணர்க.

லாம், பிறந்தநாட் டொட்டுச் சிறந்ததன் றீம்பா, லறந்தரு நெஞ்சோ டருள்சுரந் தூட்டும்' தன்மைத்தாகலின் நல்லான்என்ருர். நல்லான் றீம்பால் கன்றுமுண்ணுமற் கலத்தினும்படாமல் வெறிதே நிலத்தே உகுத்தொழிந்தாற்போல எனதுமாமைநிறத்தொடு கூடிய அழகு எனக்குமாகாமல் என்றலைவற்குமுதவாமற் பசலையானுண்டுகழிய வேண்டும் என்ருர் என்க. என்னை என்பது 'என்னைமுன் னில்லன் மின் றெவ்விர் பலரென்னை, முன்னின்று கன்னின் றவர்.' என்புழிப் போல என்றலைவன் என்னும் பொருட்டு. பொருண்மேற்சேறல் முதலாயின மனைவியோடில்லை என்பதனுல் மகளிர்க்கு இவ்வரிய பிரிவுத்துயர் அநுபவித்தலையுறுவது என்னுங்கருத்தால் 'வேண் டும்' என்று கூறினுர். இவ்வாறு இவர் பாடியருளிய செவ்விய கூரிய தீஞ்சொல்வவ்விய பாடல்கள் நற்றிணையில் ௩-ம்; குறுந்தொகையில் அ-ம், நெடுந்தொகையில் உ-ம், திருவள்ளுவமாலையில் க-ம், ஆகப்பதி னுன்குள்ளன. இவற்றுள் 'வாடலுழுஞ்சில்' என்னும் நெடுந் தொகைச்செய்யுட்கண் இவர் திதியன் என்பவன் குறுக்கையென்னும் ஊர்ப்புறத்து *அன்னியொடுபொருது அவ்வன்னியின் காவன்மர மாகிய புன்னையினை வேரோடு தடிந்தகதையினையும், காதலற்கெடுத்த ஆதிமந்திகதையினையும், †சேரனொருவன் வேலாற் கடலோட்டிய கதையினையும் எடுத்துக்கூறியுள்ளார். திருவள்ளுவமாலையுள்,

செய்யா மொழிக்குந் திருவள் ளுவர்மொழிந்த
பொய்யா மொழிக்கும் பொருளொன்றே—செய்யா
வதற்குரிய ரந்தணரே யாராயி னேனை
யிதற்குரிய ரல்லாதா ரில்.

என்பது இவர் பாடியது. இதன்கண் வேதத்தினைச் செய்யாமொழி எனவழங்கியதனுல், இவர் வேதம் நித்தியமெனவும், அபௌருஷேய மெனவுங் கருதிய கோட்பாடுடையரென்ப தறியப்படுவது. இவ் வெண்பாவானே இவர் வேதவழக்கொடுபட்ட கொள்கையினரென் பதும் எளிதினுணரத்தகும். திருக்குறளைப் பொய்யாமொழி என் னும் பெயரான் வழங்கினுருமிவரேயாவர். இவர் 'காதலற் கெடுத்த

*இவ்வன்னியுடைய ஊர் அன்னியூர். தேவாரத்திருப்பதிகளுள் ஒன்று.
†இவன் சேரமான் கடலோட்டியவேல்கெழுகுட்டுவன். (புறம்.௩௬௯)

சிறுமையொடு நோய்கூர்ந், தாதி மந்தி போலப் பேதுற், றலந்தனெ னுழல்வேன் கொல்லோ' (அகம்-சுரு) என்பதனால் இவர் ஆதிமந்தி யார்க்குப்பிற்பட்டகாலத்தவர்என்பதும், ஔவையார் "வெள்ளிவீதி யைப் போல" (அகம்-கசஎ) என்பதனால் ஔவையாருக்கு முற் பட்டகாலத்தவரென்பதும் நன்குணரத்தகும். இவரது நல்லிசைப் புலமையின் பல்வளம் பலருமறிய இவரது இன்பப்பகுதியின் பொ ருட்பாடல்களை ஈண்டுத்தருகின்றேன். இவற்றானும் இவர் தங்கண வனைத் தேடியெங்கும் உழன்றமை ஆராய்ந்துகொள்க.

## நற்றிணை.

(க) சிறுவெள்ளாங் குருகே சிறுவெள்ளாங் குருகே
துறைபோ கறுவைத் தூமடி யன்ன
நிறங்கிளர் தூவிச் சிறுவெள்ளாங் குருகே
யெம்மூர் வந்தெம் முண்டுறைத் துழைஇச்
சினைக்கெடிற் றார்கையை யவரூர்ப் பெயர்தி
யனையவன் பினையோ பெருமறை வியையோ
வாங்கட் டெம்புன லீங்கட் பரக்குங்
கழனிநல் லூர மகிழ்நர்க்
கென்னிழை பருவரல் செப்பா தோயே.

இது காமமிக்க கழிபடர் கிளவி.— (எ0)

ஷை

(உ) திங்களுந் திகழ்வா னேர்தரு மிமிழ்நீர்ப்
பொங்குதிரைப் புணரியும் பாடோ வாதே
யொலிசிறந் தோதமும் பெயருமலிபுனற்
பல்பூங் கானன் முள்ளிலைத் தாழை
சோறுசொரி குடவையிற் கூம்புமுகை யவிழ
வளிபரந் தூட்டும் விளிவி னாற்றமொடு
மையிரும் பனைமிசைப் பைதல வுயவு
மன்றிலு மென்புற நரலு மேன்றிவ்
விரல்கவர்ந் துழந்த கவர்வின் யாழ
யாம முய்யாமை நின்றது
காமம் பெரிதே களைநரோ விலரே.

இது காமமிக்க கழிபடர் கிளவி; மீதூர்ந்த தலைமகள் சொல்லி யது. (ருரு)

(ரு) நிலவே, நீனிற விசும்பிற் பல்கதிர் பரப்பிப்
பான்மலி கடலிற் பரந்துபட் டன்றே
யூரே, யொலிமரூஉஞ் சும்மையொடு மலிபுதொகு பீண்டிக்
கலிகெழு மறுகின் விழவய ரும்மே
வானே, பூமலர் கஞலிய பொழிலகந் தோறுந்
தாமமர் துணையொடு வண்டிமி ரும்மே
யானே, புனையிழை ஞெகிழ்த்த புலம்புகொ ளவலமொடு
கனையிருங் கங்குலுங் கண்படை யிலனே
யதனல், என்னெடு பொருங்கொலிவ் வுலக
முலகமொடு பொருங்கொலென் னவலமுறு நெஞ்சே.

இதுவேட்கைபெருகத் தாங்குகல்லாளாய் ஆற்ருமை மீதூர்கின்ருள் சொல்லியது.— (நகஅ)

## குறுந்தொகை.

(சு) 'கன்று முண்ணது ........................ கவினே'

இது பிரிவிடையாற்ருளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி யுரைத்தது. (உஎ)

ஷை

(ரு)*காலே பரிதப் பினவே கண்ணே
நோக்கி நோக்கி வாளிழந் தனவே
யகலிரு விசும்பின் மீனினும்
பலரே மன்றவிவ் வுலகத்துப் பிறரே.

இஃது இடைச்சுரத்துச் செவிலித்தாய் கையற்றுச் சொல்லியது. (சச)

ஷை

(சு) இடிக்குங் கேளிர் நுங்குறை யாக
நிறுக்க லாற்றினே நன்றுமற் றில்ல
ஞாயிறு காயும் வெவ்வறை மருங்கிற்

---

†இதனை அகத்திணைக்கேற்ற துறைவகையின் அமைத்துக் கருத்துரை கூறிஞரேனும் வெள்ளிவீதியார் தங்கணவனைப்பிரிந்து தேடிச்செல்வுழித் தங்கால்கள் நடக்கலாகாது செலவு தப்பியமையினையும் தங்கண்கள் அவனையே நேடி ஒளியிழந்தமையினையும் விசும்பின் மீனிற் பலர்பிறரைக் கண்டும் அவ்விசும்பிற் றிங்கள் போன்ற தம் கணவனைக்காணுமல் உழன்றமையினையுமே இது குறிப்பதென்று கொள்க. இவ்வாறே தருமிக்குப் பொற்கிழியளிப்பான் வேண்டிச் செண்பகமாறன் உளக்கருத்தமைத்து இறையனுராற் பாடப்பட்ட "கோங்குதேர்வாழ்க்கை" என்னுஞ் செய்யுளும் இக்குறுந்தொகையிற் கோக்கப்பட்டு அகத்திணைக்கேற்ற துறைவகை பெறுவதும் ஈண்டைக்கு நோக்கிக் கொள்க.

கையி லூமன் கண்ணிற் காக்கும்
வெண்ணெ யுணங்கல் போலப்
பரந்தன் றிந்நோய் நொண்டுகொளற் கரிதே.

இதுகழற்றெதிர்மறை. (ருஅ)

ஷ

(எ)* நிலந்தொட்டுப் புகாஅர் வான மேறார்
விலங்கிரு முந்நீர் காலிற் செல்லார்
நாட்டி னாட்டி னூரி னூரிற்
குடிமுறை குடிமுறை தேரிற்
கெடுநரு முளரோநங் காத லோரே.

இது பிரிவிடையழிந்த தலைமகளைத் தோழி வற்புறுத்தியது: நீயவர் பிரிந்தாரென் றாற்றாயாகின்றதென்னை? யானவருள்வழி யறிந்து தூது விட்டுக் கொணர்வேனின்னாற்றாமைநீங்குக எனத் தோழி தலைமகளை ஆற்றுவித்தது. தோழி தூதுவிடுவாளாகத் தலைமகள் தனதாற்றாமையாற் கூறியதூஉமாம். (கநo)

ஷ

(அ) அம்ம வாழி தோழி நம்மூர்ப்
பிரிந்தோர்ப் புணர்ப்போ ரிருந்தனர் கொல்லோ
தண்டுடைக் கையர் வெண்டலைச் சிதவலர்
நன்றுநன் றென்னு மாக்களொ
டின்றுபெரி தென்னு மாங்கண தவையே.

இது தலைமகன்றமர் வரைவொடு வந்து சொல்லாடாநின்றுழி வரைவு மறுப்பவோ எனக் கவன்ற தலைமகட்குத் தோழி சொல்லியது. (கசகூ)

ஷ

(கூ) அளிதோ தானே நாணே நம்மொடு
நனிநீ டமர்ந்தன்று மன்னே யினியே
வான்பூங் கரும்பி னோங்குமணற் சிறுசிறை
தீம்புன னெரிதர வீந்துக் காங்குத்
தாங்கு மளவைத் தாங்கிக்
காம நெரிதரக் கைந்நில் லாதே.

இஃது உடன்போக்குணர்த்திய தோழிக்குத் தலைமகள் சொல்லியது. (கசகூ)

---

* இதனானும் இவ்வெள்ளிவீதியார் தங்கணவனைத் தேடியுழன்றமை நன்குணரப்படும்.

(க௦) சுரஞ்செல் யானைக் கல்லுறு கோட்டிற்
றெற்றென விறீஇயரோ வைய மற்றியா
நும்மொடு நக்க வால்வெள் ளெயிறே
பாணர், பசுமீன் சொரிந்த மண்டை போல
வெமக்கும் பெரும்புல வாகி
நும்மும் பெறேஎ மிறீஇயரெம் முயிரே.

இது கற்புக்காலத்துத் தெளிவிடை விலங்கியது; இனித் தோழி வரைவுநீட்டித்தவழி வரைவுகடாயதூஉமாம். (கசு௬)

௵

(கக) வெண்மணல் விரிந்த வீததை கானற்
றண்ணந் துறைவன் றணவா வூங்கே
வாலிழை மகளிர் விழவணி கூட்டு
மாலையோ வறிவேன் மன்னே மாலை
நிலம்பரந் தன்ன புன்கணொடு
புலம்புடைத் தாகுத லறியேன் யானே.

இது பிரிவிடை வற்புறுத்துந் தோழிக்குக் கிழத்தி வன்புறை எதிரழிந்தது. (௨அ௬)

அகநானூறு.

(க௩) வாட லுழுஞ்சில் விளைநெற் றந்துண
ராடுகளப் பறையி னரிப்பன வொலிப்பக்
கோடை நீடிய வியன்பெருங் குன்றத்து
நீரி லாரற்று நிவப்பன களிறட்
டாளி லத்தத் துழுவை யுகளுங்
காடிறந் தனரே காதலர் மாமை
யரிநுண் பசலை பாஅய்ப் பீரத்
தெழின்மலர் புரைதல் வேண்டு மலரே
யன்னி குறுக்கைப் பறந்தலைத் திதியன்
றொன்னிலை முழுமுத லுமியப் பண்ணிப்
புன்னை குறைத்த ஞான்றை வயிரிய
ரின்னிசை யார்ப்பினும் பெரிதே யானே
காதலற் கெடுத்த சிறுமையொடு நோய்கூர்ந்
தாதி மந்தி போலப் பேதுற்
றலந்தனெ னுழல்வேன் கொல்லோ பொலந்தார்க்
கடல்கால் கிளர்ந்த வென்றி நல்வேல்

வான வரம்ப னடன்முனைக் கலங்கிய
வுடைமதி லோரரண் போல
வஞ்சுவரு நோயொடு துஞ்சா தோனே.
எ-து வற்புறுத்துகின்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது(சரு)

௵

(கரு)பாம்புடை விடர பனிநீ ரிட்டுத்துறைத்
தேங்கலந் தொழுக யாறுநிறைந் தனவே
வெண்கோட் டியானை பொருத புண்கூர்ந்து
பைங்கண் வல்லியங் கல்லளைச் செறிய
முருக்கரும் பன்ன வல்லுகிர் வயப்பிணவு
கடிகொள வழங்கா ராறே யாயிடை
யெல்லிற் றென்னுன் வென்வே லேந்தி
நசைதர வந்த நன்ன ராள
னெஞ்சுபழு தாக வறுவியன் பெயரி
னின்றிப் பொழுதும் யான்வா ழலனே
யெவன்கொல் வாழி தோழிநம் மிடைமுலைச்
சுணங்கணி முற்றத் தாரம் போலவுஞ்
சிலம்புநீடு சோலைச் சிதர்தூங்கு நளிர்ப்பி
னிலங்குவெள் ளருவி போலவு
நிலங்கொண் டனவாற் றிங்களங் கதிரே.
எ-து இரவுக்குறிச் சிறைப்புறமாகத் தோழி சொல்லியது. (ந-சுஉ)

(கச) "செய்யாமொழி"—(திருவள்ளுவமாலை-உ௩.)

பொருள் விரித்துணருந் தெருளுடை மனத்தார்க் கெல்லாம் இப்பதினான்குபாடல்களும் பதினான்குலகேயாம்எனின் அது வியப்பன்று; இத்துணையுங் கூறியவாற்றான் வெள்ளிவீதியார்வரலாறு ஒருவாறுணரப்படும்.

இங்ஙனம்,

ரா-இராகவையங்கார்,

பத்திராசிரியர்.

# இலக்கணவாராய்ச்சி.

நன்னூல் விருத்தியுரைகாரர் "சாத்துமநுபந்த சதுட்டய நூற்கு விடயஞ் சம்பந்தம் பயனதிகாரிகளென நான்கென்பதறியே" (வேதா. அ) என்னும் அநுபந்த சதுட்டயங்களையும் தம் விருத்தியிலே பொருத்தியுரைக்குங் கருத்துடையராய், "மலர்தலை" என்னுஞ் சிறப்புப்பாயிரச் சூத்திரவுரையிலே "வடநூலார் யாப்பை ஆநந்தரியம் என்றும், நுதலிய பொருளை விடயம் என்றும், கேட்போரை அதிகாரிகள் என்றும், பயனைப் பிரயோசனம் என்றும் கூறுப. அவருள் ஒரு சாரார் ஆநந்தரியப் பொருளை, நூலைப் பயப்பித்தற்குக் காரணமாய்க் கேட்போரை விசேடித்து நிற்றலின் வேறு கூறவேண்டா என்னுங் கருத்தால் ஆநந்தரியம் நீக்கிச் சம்பந்த மொன்று கூட்டி நான்கென்பாராயினர். சம்பந்தம் என்பதூஉம் யாப்பென்னும் பொதுச்சொல்லாற் கொள்ளப் படும்" என்று கூறி அவ்வளவிலமையாது, "இக்கருத்தறியாத உரையாசிரியரை யுள்ளிட்டோரெல்லாரும் நூலரங்கேறும் அவைக்களத்துக் கேட்டாரைக் கேட்போர் என்றும், தொகுத்தன் முதலிய வழியின்வகையினை யாப்பு என்றுங் கூறினர்." என உரையாசிரியர் முதலியோரையும் மறுத்துரையாடினர்.

அநுபந்த சதுட்டயங்களாகிய விடயம், சம்பந்தம், பயன், அதிகாரிகள் என்பவற்றுள்ளே சம்பந்தம் என்பதற்கு யாப்பு என்பதனையும், அதிகாரிகள் என்பதற்குக் கேட்போர் என்பதனையும் இயைத்து யாப்பு, கேட்போர் என்னும் இரண்டற்கும் பிறர் கூறிய உரைகளோடு மாறுபடுவாராயினர். சம்பந்தமெனினும் ஆநந்தரியமெனினும் ஒக்கும். ஆநந்தரியம் என்பது அநந்தரம் என்பதனினின்று வந்த தத்திதாந்தபதம். அநந்தரம் - இடையீடில்லாதது, தொடர்ச்சி: எனவே சம்பந்தம் என்பதின் வேறுவதன்று; அந் - இன்மை. அந்தரம் - இடையீடு. ஆதலின், "ஆநந்தரியம் நீக்கிச் சம்பந்தமொன்று கூட்டி" என்றது பயனுள கூற்றாவ தெங்ஙனம்!

இறையனாரகப்பொருளுரைகாரர் இறையனாரகப் பொருளிலே முதலாஞ் சூத்திரவுரையிலே "இனி யாப்பென்பது நூல் யாப்பு.

நூல் யாக்குமிடத்து நான்கு வகையால் யாக்கப்படும்; தொகுத்தும், விரித்தும், தொகைவிரியாகவும் மொழிபெயர்த்தும் என; என்னை? "தொகுத்தல் விரித்த றொகைவிரி மொழிபெயர்த் - ததர்ப்பட யாத்தலோ டனைவகைப் படுமே' என்றாராகலின்" எனவும், "கேட்போர் என்பது இன்னார் கேட்டார் என்பது" எனவும் உரைத்தார். மதுரைக்கடைச்சங்கப் புலவர்களுள்ளே திலகராகிய நக்கீரதேவராற் செய்யப்பட்டுக் குமாரதெய்வமாகிய உருத்திரசருமராற் கொள்ளப் பட்ட இவ்வுரை பிறருரைகள்போல மறுத்துரையாடப்படுவதொன் றன்று.

"கேட்டல் பாடங் கேட்டல்" எனவும், "கேட்போர் மாணாக்கர்" எனவும், கேட்போர் என்பதற்கு நூலரங்கேறும் அவைக்களத்துக் கேட்டாரைக் கூறுதல் பொருந்தாது எனவும், கேட்போர் எனஎதிர் காலத்தாற் கூறியதே அதற்குச் சான்றெனவுங்கூறுவர். கேட்போர் என்று நூலரங்கேறுமவைக்களத்துக் கேட்டாரையே வழங்குவர். அது "சேரர் காவலர் பரிவுடன்கேட்பித்த திருவுலாப்புறங்கொண்டு" (பெரியபு. வெள்ளானை. ௩அ) "சிரதங்கோட்டு முனிகேட்டநூற்படி" (பழமலை) என்பவைகளாலும் பெறப்படும். அதங்கோட்டுமுனிகேட்ட நூல் - தொல்காப்பியம். கேட்போர்என்பதனைக் கேட்பு எனப்பகுத்து வருங்காலவிகுதியின்றி முடிப்பாருமுளர். அதிகாரிகள் என்ப திலே வருங்காலமாவது பிறவாவது பெறுதல் கூடாது.

மேலும் யாப்பு என்பதற்குத் தாங்கொண்ட பொருட்கியையு மாறு "தொகுத்தல் விரித்தல்" என்னுஞ் சூத்திரத்திற்குக் கருத் துரையாக "வழியின்வகையாகிய நூல்யாப்புக்குச் சிறப்புவிதி" என் றார். யாப்பு என்பதற்கு இவர் கொண்டபொருளும், இக்கருத்துரை யும் நூலாசிரியராகிய பவணந்தி முனிவர்க்குஞ் சம்மதமாகுமா? பவ ணந்திமுனிவர் சிறப்புப்பாயிரத்தினிலக்கணங் கூறுவாராய்,

"ஆக்கியோன் பெயரே வழியே யெல்லை
நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே
கேட்போர் பயனோ டாயெண் பொருளும்
வாய்ப்பக் காட்டல் பாயிரத் தியல்பே"

என்னுஞ் சூத்திரத்தால் ஆக்கியோன் பெயர் முதலிய எட்டும் பொதுவே கூறி அவ்வெட்டனுள்ளே நான்காமெண்ணுமுறைக்கணின்ற நூற்பெயர்க்குச் சிறப்பு விதியாக "முதனூல் கருத்தன்" என்னுஞ் சூத்திரத்தினையும், ஐந்தாமெண்ணுமுறைக்கணின்ற யாப்புக்குச் சிறப்புவிதியாகத், "தொகுத்தல் விரித்த றொகைவிரி மொழிபெயர்ப் - பெனத்தகுநூல்யாப் பீரிரண் டென்ப" என்னுஞ் சூத்திரத்தினையுங் கூறினர். உரைகாரர் "வழியின்வகை" என்றது இரண்டாமெண்ணுமுறைக்கணின்ற வழியை நோக்கியன்றே! அங்ஙனமாயின், நான்காவதாய் நின்ற நூற்பெயர்க்கு முன்னும், இரண்டாவதாய் நின்ற வழிக்கு அதன்பின்னுமாகக் "கிரமப்பிரட்டம்" என்னுங் குற்றம் பற்றுமாறு கூறுவாரா? "வழியின்வகை" என்பதற்கு வழிநூலின் வகையென்பாராயின், வழிநூலின்வகை எனக்கூறாததென்னையோ ?

பொதுப்பாயிரத்திலே "நூற்பெயர்வழக்கொடு" என்னுஞ் சூத்திரவுரையிலே "உத்தியானமைக்கும் பொருளை உத்தி என்றது ஆகுபெயர்" என்றார். உத்தி என்பதற்கு இவர் கொண்டபொருள் யாது? உத்தி என்பது தென்சொல்லா? யுக்தி என்னுஞ் சங்கதமொழியின் தற்பவமன்றே! உத்தியாவது யாது? ஒன்றற்கொன்று பொருந்தாத சொற்களையாவது பொருள்களையாவது பொருத்தஞ் செய்வதே யுக்தி என்று போஜதேவர் கூறுவர்.

சுலோகம்.

அயுஜ்யமாநயோரர்த்தயோ: ஸம்பந்தஸ்யாவபாவந: |
யோஜநா க்ரியதே யாஸௌ யுக்திரித்யுச்யதே புதை: ||

மேலும் யுக்தியினைப் பதயுக்தி என்றும், பதார்த்தயுக்தி என்றும் வாக்கியயுக்தி என்றும், பிரபந்தயுக்தி என்றும் பலவகையாக் கூறினர். இங்கே கூறியது பிரபந்த யுக்தியினைப்போலும். சேனாவரையரும் தொல்காப்பியத்துக் கிளவியாக்கத்திலே கக-ஞ் சூத்திரவுரையிலே "தம்மரபினவே என்பதனைப்பிரித்து வேறுதொடராக்கிச் சொற்கண் மரபுபிறழா தம்மரபினவே என மரபுவழூக்காத்ததாக வுரைக்க. இது யோகவிபாகம் என்னுநூற்புணர்ப்பு" என்றார். நூற்புண

ர்ப்பு - தந்திரவுத்தி. நூலெனினும் பிரபந்தமெனினும் பொருந்தும். யுக்தி என்பதற்குப் பரிமேலழகர் "பொருந்துமாறு" என்று பொருள் கூறுவர். அது "நல்லாற்றுணடி" என்னுங் குறளுரையிலே, "பொருந்துமாறுவது இது கூடும் கூடாதெனத்தன்கண்ணே தோன்றுவது. இதனை வடநூலார் யுக்தி என்ப." என அவர் கூறிய வாக்கியத்தாற்பெறப்படும். இங்ஙனம் கூறப்படுதலால் "உத்தி என்றது ஆகு பெயர்" என்பதும் பொருந்துமாறுகுமா ?

பதவியலிலே "பகுப்பாற்பயனற்று" என்னுஞ் சூத்திரவுரையிலே பகாப்பதத்திற்குக் கூறிய உதாரணங்களுள்ளே நிலம் என்பதனையும் ஒன்றுகக்கொண்டார். தமிழ்மொழிகளாகிய நிலம்என்பதும், நிலை என்பதும் நிற்றலுடையதென்னும் ஒரு பொருட்கிளவிகளாகிய க்ஷமா, ஸ்திரா, ஸ்தாவரை என்னும் பூமியின் பரியாய நாமங்களுக்குச் சமபதங்களாம். நிலம் என்பது நில்-அம்எனவும், நிலை என்பது நில்-ஐ எனவும் பகுக்கப்படும். பின் நிலம் என்பது பகாப்பதமாகுமா?

மேற்படியியலிலே "றவ்வொடுகரவும்மை" என்னுஞ்சூத்திரவுரையிலே "என்றிசினேர், என்மர், என்மனுர் என்பவற்றுள் எடுத்தோதாப் பிறவிடைநிலைகள் நின்று முன்னையதொன்றும் இறந்தகாலமும், பின்னையவிரண்டும் எதிர்காலமுங் காட்டின." என்றுர். இங்கே முன்னையதொன்றென்றது இசின்என்பதனையன்றே! "உரைத்திசின்" "கண்டிசின்" "என்றிசின்" என்பவற்றிற்போல இறந்தகாலவிடைநிலைகளுக்குப் பின்னே இடைச்சொல்லாய் வருவதன்றி இசின் என்பது தனியே இறந்தகாலவிடைநிலையாய் எங்கேயாவது வருவதுமுண்டா ?

உயிரீற்றுப் புணரியலிலே "வலித்தன்மெலித்தல்" என்னுஞ் சூத்திரவுரையிலே குறுக்கலுக்குப் "போத்தருர்புல்லறிவினர்" என்பதனையும், "ஒருமொழிமூவழி" என்னுஞ் சூத்திரவுரையிலே இடைக்குறைக்கு "ஓதி" என்பதனையும் உதாரணமாகக் காட்டினர். போத்து என்பது போக்கு என்பது போலப் போக்கப்படுவது என்னும் பொருளுடையதாய்க்குற்றத்தினையுணர்த்தும்ஒருகாரணமொழியன்றே! "போத்தனுங் கிவ்வரைப் போந்து" என்பது தணிகைப்

புராணம். (வள்ளி. அ) ஓதி என்பதும் ஓந்தியின் பெயர்களுள் ஒன்ருய இயற்கைமொழியேயாம். "ஓமானோதியோத்தியோந்தி" என்பது பிங்கலம். ஆதலின் இவைகளை முறையே குறுக்கல் என்றும் இடைக்குறை என்றும் கூறுவதெப்படி?

உருபுபுணரியலிலே சாரியை கூறுஞ் சூத்திரமாகிய "அன்னான்" என்பதிலே "அன்னானினல்" என்பதனை "அன், ஆன், இன், அல்" எனக்கொண்டு அல் என்பதற்கு உதாரணமாகத் "தொடையல்" என்பதனைக் காட்டினார். இலக்கணவிளக்கச் சூருவளியிலே சிவஞான முநிவர், "தொடையல் என்புழி அல் விகுதி யென்றொழிக. அற்றுச்சாரியை பொருணிலைக்குதவிசெய்யுஞ் சிறப்புத் தோன்ற "நல்லற்று" என்ற நன்னூலார்கருத்தறியாது அல்லுச்சாரியை எனக்கொண்டார்" என்ருர். இவ்விரு கொள்கைகளுள்ளே கொள்ளத்தக்கது யாது? விருத்தியுரைகாரர் கூற்ரு? சிவஞானமுநிவர் கூற்ரு?

பெயரியலிலே "பெண்மைவிட்டாணவாவுவ" என்னுஞ் சூத்திரவுரையிலே "பேடு, அழிதூஉ, அலி, மகண்மா என்பன ஒருபொருட்கிளவிகள்" என்ருர். பேடும் அலியும் ஒன்ரு? பேடும் வேறு; அலியும் வேறு என்பார்பலர். கந்தபுராணகாரரும் அவ்வாறே கூறினர். "பெண்ணோவலிதானே பேடோவெனவுரைப்பார்" என்பது கந்தபுராணம். மகண்மாஎன்பது இப்பொருளுடையதாய் வருதற்கு நூற்பிரமாணம் யாது? 'மைந்தரைப்பார்ப்பனமாமகண்மாக்குழாம்' (விமலை. கச) என்னுஞ் சீவகசிந்தாமணியாலும், "ஆணடிநிழலோம்பியமர்துயின்மகண்மாவை" என்னுந் தணிகைப்புராணத்தினாலும், மகண்மா என்பது விலங்குவர்க்கத்துள்ளே ஒன்றென்பது பெறப்படுகின்றது.

மேலும் அவ்வியலிலே "ஒருபொருள் குறித்த" என்னுஞ் சூத்திரவுரையிலே "ஈண்டு இயற்சொற்றிரிசொ லென்றது அவற்றின் எழுத்துக்கள் திரியாமையுந் திரிந்தமையுங் கருதியன்று: வானரத்தின்முகந் தன்னியல்பாயிருந்ததேனும் நரர்முகச் செவ்விக்கு மறுதலைப்பட்டமை கருதி வலிமுகமெனப்பட்டதுபோலக் கல்வியேதுவானன்றி இயல்பாகத் தம்பொருளையுணரநிற்றலின் இயற்சொலென்

றும், அவ்வியல்பிற்கு மறுதலைப்பட்டுக் கல்வியேதுவாற் றம்பொருளை யுணரநிற்றலிற் றிரிசொலென்றுங் கூறப்பட்டதென்க" என்றார். வலிமுகம் என்பது வடசொல்லா? தென்சொல்லா? பொருள்யாது? வலிமுகம் என்பது வடசொல்லேயாம். வலிமுகம் என்பதற்குக் குருபாலப்பிரபோதிகைகாரர் திரங்கலமைந்தமுகமுடையது எனப் பொருள் கூறுவர். வலி - திரங்கல், மடிப்பு. சுந்தரமூர்த்திநாயனாருந் திருப்பனையூர்ப்பதிகத்திலே திரங்கன்முகவன் என்று குரங்கினைக் கூறினர்.

## தேவாரம்.

மரங்கண்மேன்மயிலாடமண்டபமாடமாளிகைகோபுரத்தின்மேற்
றிரங்கல்வன்முகவன்புகப்பாய்திருப்பனையூர்த்
துரங்கன்வாய்பிளந்தானுந்தூமலர்த்தோன்றனுமறியாமற்றோன்றிநின்
றரங்கிலாடவல்லாரவரேயழகியாரே.

நன்னூல் மங்கலங் கூறியவழியும் முடிவுபெறவில்லை என்பாருமுளர். "மங்கலங் கூறிய வழியும் நன்னூல் முதலியவற்றின் முடிவு காணாமையின்" என்பது தருக்கசங்கிரகவுரை. நன்னூலிலே "பூமலியசோகின்புனைநிழலமர்ந்த, நான்முகற்றொழுதுநன் கியம்புவனெழுத்தே" என்பது எழுத்ததிகாரத்திற்குக் கூறிய மங்கலம். "முச்சகநிழற்று முழுமதி முக்குடை, அச்சுத னடிதொழு தறைகுவன் சொல்லே" என்பது சொல்லதிகாரத்திற்குக் கூறப்பட்ட மங்கலம். மங்கலத்திற் கூறியவாறே எழுத்துச்சொல்லென்னும் அதிகாரம் இரண்டும் முடிவுபெற்றன. இவையன்றி நான்முற்றையுங் கருதும் மங்கலமும் உண்டா? பொருளதிகாரம் முதலியனவுஞ் செயப்பட்டனவா? செயப்படவில்லையா? சிறப்புப் பாயிரத்தினாலே ஐந்துஞ் செய்தார் என்பது பெறப்படுகின்றது.

யாழ்ப்பாணத்துச் சுன்னாகம், இங்ஙனம்,
சோபகிருதுஸு பங்குனிமீ அ. குமாரசுவாமிப் பிள்ளை.

---

திருச்சிற்றம்பலம்.

# ஆகுபெயர் அன்மொழித்தொகை ஆராய்ச்சி.

"அணங்குகோ லாய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொன் மாலுமென் னெஞ்சு"

என்னுந்திருவாக்கிற் போந்த 'கனங்குழை'என்பதனைப் பரிமேலழகியார் ஆகுபெயரென்றுரைப்ப; அவ்வுரைக்குறிப்பை ஆசிரியர் சிவஞானயோகிகள் தாமியற்றிய இலக்கணவிளக்கச் சூறாவளியிற் பொருந்தாதெனமறுத்து மற்றஃது அன்மொழித்தொகையேயாமென்று நிறீஇயினர். இனிப்பரிமேலழகியார் ஆண்டதனை ஆகுபெயரென்றுரைத்த கருத்துண்மை தேறாது சிவஞானயோகிகள் அவருரைக்குறிப்பினை மறுக்கத்தலைப்பட்டது ஒருசிறிதும் பொருத்தமுடைத்தன்றாதல் தெற்றெனவிளங்க ஸ்ரீமத்-அ. சண்முகம்பிள்ளையவர்கள் நுண்ணியபல நியாயங்கள் நன்கெடுத்து விரித்துத் தங்கோள் இனிதுநிறுத்துவாராயினர். இனிச்சண்முகம்பிள்ளையவர்களுரைத்த இவ்வுரையோடு மறுதலைப்பட்டு ஸ்ரீமத்-சி. கணேசையரவர்கள் தாமுஞ் சில வாசங்கைநிகழ்த்தினர். இனி இவ்விலக்கணநுண்பொருளாராய்ச்சி தமிழ்நூல்கற்கும் மாணாக்கர்க்கு இன்றியமையாது வேண்டப்படுவதொன்றாகலின் இதுதன்னை நடுநிலைதிறம்பாது பொருளுண்மை காண்டற்பொருட்டு ஒன்றோடொன்றைப் புடைப்படவைத்தாராய்ந்து உண்மைமுடிபு தேறல் தமிழ்ப் புலவோர்க்குப் பெருங்கடமையாம். இக்கடமைவழாது செவ்வியவுள்ளத்தோடும் வாதம் நிகழ்த்திய சண்முகம்பிள்ளையவர்கட்கும் கணேசையரவர்கட்கும் வந்தனம் தருகின்றேம். இனி இவர் தம்மிற்றாமே பெரிதுமுரணித்தாந்தாமுரைப்பனவே பொருளென்றுகொண்டு மலைதல்கண்ட மாணாக்கர் 'குன்றுமுட்டியகுரீஇப்போலவுங் குறிச்சிபுக்கமான்போலவும்' பெரிதுமயங்கி யிடர்ப்படுவராகலின் அவர் மயக்க வுணர்வு களைதற்பொருட்டு ஈண்டவர் உரைத்தவுரையெலாம் ஒருங்காராய்ந்தெமதுண்மைக்கருத்து நிலையிடுவாம்.

இனிப்பரிமேலழகியார் குறிப்புணராது சிவஞான யோகிகள் அவருரைக்குக்குற்றங்கூறியது ஒருசிறிதும் பொருந்துமாறில்லையெ ன்பது சண்முகம்பிள்ளையவர்களால் இனிது காட்டப்பட்டதாகலின் இவருரையோடு மறுதலைப்பட்டு வாதம் நிகழ்த்துவான் புகுந்த கணேசையர் இவருரையினை வரன்முறை பிறழாது மறுத்துச் சிவ ஞானயோகிகளுரை பொருந்துமெனவாதல், அஃதில்லையேற் பரிமே லழகியாருரை சண்முகம்பிள்ளை கூறுமாறன்றிப் பிறிதொருவாற் ரூற் பொருத்தப்படுமெனவாதல் தங்கருத்து வேறுபாடு நன்கறிவித் தலே அவர்தமக்கு முறையாம். அம்முறைவழுவி ஆண்டைக்கொரு சிறிதும் இயைபில்லா 'அன்மொழித்தொகைமேல் வரும் ஆகுபெ யர்' எனுமொரு விடயத்தைப்பற்றி யெழுதல் ஒரு நிக்கிரகத்தான மாதல் காண்க. அல்லதூஉம்அன்மொழித்தொகையும் ஆகுபெயரும் ஒன்றென்றல் பரிமேலழகியார்க்குக் கருத்தாவதில்லை யென்று சண் முகம்பிள்ளை தெளித்துரைத்த நுண்பொருள்களை முறையே வழி மொழிந்துகொண்டு மறுக்கலாது, சேனவரையர் கருத்துமாத்திரம் உணர்த்தி நெகிழ்ந்துபோதலும் ஒரு நிக்கிரகத்தானமாம். அதுகிட க்க. கணேசையரவர்கள் நிகழ்த்திய வாதம் தருக்கநெறி பிறழ்ந்து போயிற்றென்றன் மாத்திரமே ஈண்டறியற்பாற்று. ஏனைய சிலவற் றில் அவர்தமக்குண் மாறுபட்டன இவை யென்றுராய்ந்து எமது கருத்துமுடிபு எழுதுவான்புகுந்தேம்.

சண்முகம்பிள்ளை ஆகுபெயரும் அன்மொழித் தொகையும் வேறேயாமென்கின்றார். கணேசையர் அவையிரண்டு மொன்றேயா மென்கின்றார். இனிப்பண்டையுரையாசிரியரிற் சேனவரையர்அவை யிரண்டுமொன்றே எனவும், நச்சினார்க்கினியரும் சிவஞானயோகி களும் வேறேயெனவுந் தம்முட்பெரிதுமிகலிக்கூறுவர். இனி இங்ங னம் உரையாசிரியர் தமக்குள் வேறுபாடு வந்துழியெல்லாம் அவரு ரையுள் மெய்யுரை யிதுவென்றுணர்ந்து நிச்சயித்தற்குத் தொல்லா சிரியர் இயற்றிய இலக்கண நூல்களே கருவியாவனவாம் என்க. பண்டையிலக்கணநூல்களுட் சிறந்த தொல்காப்பியம் ஆகுபெயர் அன்மொழித் தொகையிலக்கணம் வரையறுத்துணர்த்துகின்றது. யாங்ஙனமெனிற் கூறுதும். ஆசிரியர் தொல்காப்பியனார்,

"முதலிற் கூறுஞ் சினையறி கிளவியுஞ்
சினையிற் கூறு முதலறி கிளவியும்
பிறந்தவழிக் கூறலும் பண்புகொள் பெயரும்
இயன்றது மொழிதலும் இருபெய ரொட்டும்
வினைமுத லுரைக்குங் கிளவியொடு தொகைஇ
அனைய மரபினவே யாகுபெயர்க் கிளவி."

என்று ஆகுபெயரிலக்கணம் யாப்புறுத்தோதினுர். இதன்பொருள் வருமாறு:— முதற்பொருளை யுணர்த்தும் இயற்பெயர் அப்பொருளிற்றீர்ந்து அம்முதலோடு இயைபுடைய சினைப்பொருளை உணர்த்தலும், சினைப்பொருளை உணர்த்துகின்ற இயற்பெயர் அவ்வாறே அப்பொருளிற்றீர்ந்து அதன் முதற்பொருளை யுணர்த்தலும், நிலப்பெயர் அதன்கட்பிறந்த பொருளையுணர்த்தலும், பண்புப்பெயர் அதனையுடைய பண்பியை யுணர்த்தலும், காரணப்பெயர் காரியத்திற்காதலும், இருபெயர் ஒட்டிநின்றவிடத்து இருபொருளையுணர்த்தாது ஒருபொருளையே உணர்த்தலுமென்றிவ்வாறு வருவனவற்றை ஆக்கியோன் பெயர் ஆக்கப்படுபொருண்மேற்றுய் வருதலோடுந் தொகுத்துக் காணும்வழி ஆகுபெயர் அப்பெற்றிப்பட்ட இலக்கணமுடையவாதல் தெற்றென விளங்குமென்பது. இன்னும் ஆகுபெயரென்னுஞ் சொற்றொடரே தன்னிலக்கணத்தை நன்குதெரிக்கின்றது. தொல்லாசிரியர் சொற்கள் பொருளுணர்த்துமுறைகண்டு அவற்றைப் பகுத்தவழி அவை யியற்பெயர்எனவும் ஆகுபெயரென்வும் இருபகுதிப்பட்டன. இயற்பெயரென்பது பிறகாரணம் வேண்டாது பொருளின்கட்பட்ட இயற்கையே காரணமாய் வழங்கப்படுதலின் அப்பெயர்த்தாயிற்று. ஆகுபெயரென்பதவ்வாறின்றி இயற்கைக் காரணப் பொருளோடு ஒற்றுமைப்பட்டு நடக்குஞ் செயற்கைக்காரணம்பற்றி வழங்கப்படுமியல்பினதாம். நின்றுங்குநிற்கும் இயற்கையினைக் குறிக்கும் உரிமையுடையது இயல் என்னுஞ்சொல். ஆகு என்னுஞ்சொல் அவ்வியற்கையின் வேறுய்ப் பொருட்புடைபெயர்ச்சியின் செயற்கையினைக் குறிக்கும் உரிமையின் நிகழும் வினைமுதனிலையாம். இனி அவ்வியல் என்னுஞ் சொல்லாற்றொடரப்படும் பெயர்என்னுங்கிளவி தன் பொருட்பொதுமையின் நீங்கி, விசேடிக்கும் இயல் என்னுஞ்சொல்லுரிமைப்பொருளே விசேடிக்கப்படுந் தனக்குரிமைப் பொருளாகக்

கொண்டு தன்பொருளைத் தானியற்கையே யுணர்த்துமாறு காண்க தாமரை என்னும் இயற்பெயர் நாளம் இலை பூ முதலிய உறுப்புக்கள் ஒருங்கு திரண்ட ஓரியற்கைப்பிண்டப்பொருளை இயற்கைக் காரணமே தன்காரணமாய்க்கொண்டு உணர்த்துகின்றது; இவ்வியற்கைப் பிண்டப்பொருளும், அதனையுணர்த்தும் தாமரை என்னுஞ் சொல் வழக்கும் ஒருங்குணர்ந்தானொருவன், தாமரை என்னுஞ் சொற் கேட்கும் வழியெல்லாம் முன்னரே அவனறிவிற் பதிந்த அப்பிண்டப் பொருட்டோற்றம் சடுதியிலவன் உள்ளத்தோர் உருவுகொண்டு விளங்கும். இங்ஙனந் தாமரையென்னுஞ் சொல்லுணர்வும், அது பயப்பிக்கும்முதற்பொருட்டோற்றமும் ஒற்றித்து ஒருங்குதோன்றுதல் அனுபவத்திற் கண்டுகொள்க. இவ்வாறுரையாக்கால் இதன்கண் ஒன்றனை யொன்று பற்றுதலென்னுங் குற்றமுண்டாம். என்னை? தாமரை என்னுஞ் சொற்கேட்டபின் அதன் பொருட்டோற்றமுண்டாமென்றும், அப்பொருட்டோற்றங் கண்டபின் அதன் சொல்லுணர்வுண்டாமென்றும் ஒன்றனையொன்று பற்றுதலினென்பது. அல்லதூஉம், தாமரை என்னும் பிண்டப்பொருளை யறியாதான் 'தாமரை' என்னும்பெயர் மாத்திரம் எத்துணைமுறை கேட்குமாயினும் அதன் பொருளுணர்ச்சி கவரமாட்டானாய் அச்சொல்லுருவு மாத்திரையே குறிக்கொண்டறிவானும்; அப்பிண்டமும் அப்பிண்டப்பெயரும் ஒருவன் ஒருகாலத்து ஒருங்குகேட்டறிந்தானாயின், அவன் கேட்டஞான்றே அவன் உள்ளத்து ஒருங்குபதிந்து கிடந்த அவையிரண்டும் பின்னொருகாலத் துஅப்பொருண் மாத்திரங் கண்டவழி அதன் பெயரும், அப்பெயர் மாத்திரங் கேட்டவழி அதன்பொருளும் உருவுகொண்டு ஒருங்குநினைவிலெழும். இங்ஙனம் பொருடெரியாவிடத்துச் சொற்றன்னுருவு மாத்திரையே உணர்த்தலும், பொருடெரிந்தவிடத்துத் தன்னையும் பொருளையும் ஒருங்குணர்த்தலுமாம் இருநிலைமையுடையதாதல் பற்றியே ஆசிரியர்

> "பொருண்மை தெரிதலுஞ் சொன்மை தெரிதலுஞ்
> சொல்லி னாகு மென்மனார் புலவர்."

என்று வகுத்தோதியதூஉமென்க. சொல்லும் அதன்பொருளும் ஒருங்கு அறிந்தானொருவன் இவ்வாறு பின்னும் அப்பொருளறியுமிடத்து அச்சொற்றானே பிறந்தும், அச்சொல்லறியுமிடத்து அது

தன்பொருளைப் பயப்பித்தும் இயற்கைவழக்குரிமை உடைத்தாய் வருதலின் இயற்கைப்பெயர் இயற்பெயர் என்று வழங்கப்படுவதாயிற்றென்க.

இனி ஆகுபெயர் அவ்வாறின்றி இயற்பெயரைச் செயற்கைப்படுத்து அறிவான்அறிவின்கட் புடைபெயர்ச்சி விளைவித்தலின் இயற்பெயரின்வேறாய்க் குறிக்கப்படுமியல்புடைத்து. 'தாமரை புரையுங் காமர்சேவடி' என்னுஞ் சொற்றொடர்ப் பொருளறியலுறுவான் உள்ளத்துத் 'தாமரை' என்னுஞ்சொல் தன்னியற்கைப்பொருளைச் சடுதியிற் பயப்பித்துநிற்பப் பின் அதன் பொருளை 'அவன் சேவடி' என்னுஞ் சொல்லோடு இயைத்துப்பார்க்கும்வழி, நாளம் இலை பூ முதலிய வுறுப்புக்கள் ஒருங்கு திரண்ட அப்பிண்டப்பொருள் அதனோடு இணங்கமாட்டாதாய்ப் பகையுறுதலின், அதனைப் பொருத்துமாறு யாங்ஙனம் என்னும் ஓர்புடைபெயர்ச்சி ஆங்கவனறிவிற் றோன்றித் 'தாமரை' என்பதற்குத் 'தாமரைப்பூ' என்னும் ஓர் உணர்ச்சியினை மறுகணத்தே தோற்றுவிக்கும். இங்ஙனம் இயற்பெயரெல்லாந் தம்பொருளை முற்கணத்தே இயற்கையிற் றோற்றுவிக்குமென்பதூஉம், ஆகுபெயரெல்லாந் தம்பொருளை மறுகணத்தே செயற்கையிற் றோற்றுவிக்குமென்பதூஉந் திரிபின்றி அறிவுறுத்துதற்கன்றே ஆசிரியர்

"இயற்சொற் றாமே,
தம்பொருள் வழாமை யிசைக்குஞ் சொல்லே"

எனக் கருவிப்பொருளான சொல்லைக் கருத்தாப் பொருள்படநிறுத்தி 'இசைக்கும்' என்னும் வினைகொடுத்து அஃததற்கியற்கையென்பது இனிது விளக்கி, ஆகுபெயரிலக்கணங் கூறும்வழி 'முதல் கூறுஞ் சினையறி கிளவி' என்னாது 'முதலிற் கூறுஞ் சினையறி கிளவி' எனச்சூத்திரித்து 'முதற்பெயரின்கட் செயற்கைப்படுத் துணருஞ் சினைப்பொருளை யறியுங் கிளவி' என்னும் பொருடோன்ற 'இல்' என்னும் ஏழனுருபு தலைப்பெய்து அஃததற்குச் செயற்கையாதலுந் தெளியவெடுத்தோதினாரென்பது. 'சினையின்கிளவி' என்னாது 'சினையறி கிளவி' என்றமையானும் சினைப்பொருளை யுணர்த்துதல் அதற்கு இயற்கையாவதன்றிச் செயற்கையாதலும் பெறப்படும்.

இனி இச்சூத்திரத்து 'இருபெயரொட்டு' என்பதனை அன்மொழித்தொகை எனக்கொண்டு சேனாவரையர் 'பொற்றொடி வந்தாள்' எனவோர் உதாரணங் காட்டினர். அதன்பின் 'அன்மொழித்தொகை' ஈண்டுணர்த்தியதென்னை யென்னும் ஆசங்கை நிகழ்த்தி, ஆகுபெயரும் அன்மொழித்தொகையும் ஒன்றேயாமெனக் காட்டினார். 'ஆகுபெயர்' பெயரிலக்கணமுடையவாதலும், 'அன்மொழித்தொகை' தொகையிலக்கணமுடையவாதலும் அவற்றின் குறியீடுகளே இனிதுவிளக்காநிற்பவும், அதனை ஒரு சிறிதும் நுணுகி யாராயாது கூறினாராகலின் அவருரை கொள்ளற்பால தன்றென்று மறுக்க. தொகையெல்லாம் இரண்டும் இரண்டிறந்த மொழிக்கண்ணும் நடைபெறுமியல்பினவாகலான், அவற்றை நிலைக்களனாக் கொண்டுவரும் அன்மொழித்தொகையும், ஒருபெயர்க்கண்ணே செயற்கைப் படுத்துணரப்படுவதான ஆகுபெயருந் தம்முள் வேற்றுமை பெரிதுடையவாதல் இனிது விளங்கக் கிடந்தது. அற்றன்று, 'மக்கட்சுட்டு' என்னும் இருபெயரொட்டாகுபெயர் இருமொழிக்கண்ணேவந்ததாகலின் ஆகுபெயர் ஒருமொழிக்கண்ண தென்றல் நிரம்பாதாம் பிறவெனின்:—நன்றுகடாயினாய், 'மக்கள்' என்னுஞ் சொல்லும் மக்கட்பொருளை யுணர்த்தச் 'சுட்டு' என்னுஞ்சொல்லும் பகுத்துணர்தற் சிறப்பால் அவர்க்குளதாம் நன்கு மதிப்புப்பற்றி அவரையே உணர்த்த இவ்வாறிருசொல்லும் ஒட்டிநின்று மக்கட்பொருளையே சுட்டுதலின், சொன்மாத்திரையின் அஃதிருமொழிபோற்றோன்றுமாயினும் பொருள்வகையான் ஒன்றே யென்று துணியப்படுமென்க. அற்றேல், 'பொற்றொடி' என்பதும் ஒட்டியொருசொல்லாய் நின்று அணிந்தாளைக் குறித்தலின் அதனையும் ஆகுபெயரென்றுரையாமோவெனின்:—உரையாமன்றே, என்னை? 'பொன்' என்னுமியற்பெயர் தன்பொருளிற் றீர்ந்தின்றாகலானும், அது தொடியினை விசேடித்து அடைமொழியாய் நிற்பத் 'தொடி' என்பதணிந்த மகளை விசேடித்து ஒன்றன்பேலொன்றாய் வருதலானும், 'மக்கட்சுட்டு' என்பதவ்வாறின்றி இருமொழியுந் தனித்தனியே மக்கட்பொருளை யுணர்த்தி யொட்டிநிற்றலானுமென்பது. இருபெயரொட்டாகுபெயர்க்கண் யாண்டும் இருசொல்லுந் தனித்தனியே யொருபொருணுதலி ஒட்டிநின்றுழியும் அதனையேயுணர்த்துதற்கண்வரும்; அன்மொழித்

தொகைக்கண் இரண்டு சொல்லும் அங்ஙனந் தனித்தனியே பிளவு பட்டு நின்றுழியும் ஒருபொருளைக் குறியாது முன்உள்ள சொல்லை ஒன்றன்மேலொன்றாய் விசேடித்து வரும். இஃதவற்றின் வேறு பாடாம். அற்றாயின், ஒன்றன்மேலொன்றாய் விசேடித்து வரும் 'அறுபதம்' என்பதனை அடையடுத்தவாகுபெயரென்றுரைத்தலெ ன்னை? ஆண்டதிவியாத்தியாமாலோவெனின்:— ஆகுபெயர்க்கும் அன்மொழித்தொகைக்கும் வேறுபாடு நன்கறியமாட்டாதார் 'அ டையடுத்த வாகுபெயர்' என வொன்றுகொண்டிடர்ப்படுபவாயி னும், அங்ஙனமொன்று தொல்லாசிரியர் கூறிற்றின்மையானும், அவர் கூறிய வரையறையிலக்கணத்தோடு அது மாறுகோளுறுத லானும் கொள்ளாமென்பது. நன்னூல் விருத்தியுரைகாரர் 'அடை யடுத்தவாகுபெயர்' தொன்றுதொட்டு வருவதெனவும், 'அன்மொழி த்தொகை' புலவன்வேண்டியவாறு புனைந்துரை வகையாற் செய்யு ளின்கண் இயற்றிக் கொள்வதெனவும் அவையிரண்டிற்கும் வேறு பாடு தெரித்துணர்த்தினராகலின், அவையிரண்டுமொன்றே யாமெ னல் அவர்க்குங் கருத்தன்றாலெனின்:— அவர்க்கது கருத்தன்றாயி னும், 'அறுபதம்' முதலியனபோலவே 'பொற்றொடி' 'தேன்மொழி' என்றற்றொடக்கத் தன்மொழித்தொகைகளும் தொல்லாசிரியர்வழ க்காய்த் தொன்றுதொட்டு வருதலானும், ஆகுபெயர் தொன்றுதொ ட்டு வருவதெனவும் அன்மொழித்தொகை யிடையிட்டுவருவதென வும் ஆசிரியர் தொல்காப்பியனார் யாண்டு முரையாமையானும் அங் ஙனம் வேறுபாடு கூறுவாருரை போலியுரையாமென்க. அல்லதூஉம் 'அடையடுத்தவாகுபெயர்' எனவொன்று கொள்வார்க்கு அதனின் வேறாய் அன்மொழித்தொகையெனவொன்றுகோடல் வெறுஞ்சொல் லாரவாரமேயன்றிப் பொருட்பேறில்லை யென்றொழிக. இதுகிடக்க.

இனித் தொல்லாசிரியர் நூலுரைகளெல்லாம் ஒருங்குணர்ந்த ஆசிரியர் சிவஞானயோகிகள் ஆகுபெயரன்மொழித்தொகையிலக்க ணம் வரையறுக்கின்றுழி 'ஆகுபெயர் ஒன்றன்பெயரான் அதனோடு இயைபுபற்றிய பிறிதொன்றனை உணர்த்தி ஒருமொழிக்கண்ணதாம்; அன்மொழித்தொகை இயைபுவேண்டா திருமொழியுந்தொக்க தொ கையாற்றலாற் பிறிதுபொருளுணர்த்தி யிருமொழிக்கண்ணதாம்'

என்றவற்றின் வேறுபாடு தெளிவுபெற விரித்துக்கூறி மாணுக்கர்க்கு ஐயந்திரிபறவிளக்கியருளினர். இங்ஙனந் தேறப்படும் முடிபுரையே கட்டுரையெனக்கொள்ளப்படுதற்குரிமை பெரிதுடைத்தாய்த் திகழாநிற்பவும், இவ்வுறுதியுரையோடு பெரிதுமிகலிப் பூருவபக்கமாயொழிந்த சேனாவரையருரையினைத் தமக்கொரு கொழுகொம்பாய் ஊன்றிவந்துந் தங்கருத்து நன்கறிவியாதொழிதல் கணேசையர்க்குப் பொருந்தாது. ஆகுபெயரும் அன்மொழித்தொகையும் ஒன்றெனக் கூறல்வேண்டினராயின், தொல்காப்பியனார்சூத்திரக்கருத்தொடுபொருந்தவைத்துப்பின்னுரைகளை நன்காய்ந்து சிவஞானயோகிகள் அவைபொன்றுமாறில்லையென நிறுவிய பகுதியை வழிமொழிந்து நிரலே மறுத்துத் தங்கருத்துநாட்டுதலே அவர் தமக்கு முறையாம். இதனை விடுத்து 'இதுசேனாவரையர்கருத்து' 'அது பரிமேலழகர்கருத்' தென்றுரையாடி நெகிழ்ந்துபோதல் வாதமுறை பிறழ்தலாம். அது கிடக்க.

இனிக்கணேசையர் ஆகுபெயரும் அன்மொழித் தொகையும் ஒன்றேயாமெனல் பரிமேலழகியார்க்குங் கருத்தொருப்பாடாமென் கின்றார். சண்முகம்பிள்ளை அஃதவர்கருத்தன்றெனகின்றார். இவையிரண்டனுட் சண்முகம்பிள்ளை பக்கமே வலியுடைத்து; யாங்ஙனமெனின்:— ஒருமொழிக்கண்ணே செயற்கைப்படுத்துணர வருவது 'ஆகுபெயர்' என்பதினிதுபுலப்பட 'விசும்பு' 'விருந்து' 'முடிவு' என்றற்றொடக்கத்துச் சொற்களையெல்லாம் வருமிடங்கடோறும் 'ஆகுபெயர்' என்று பிறழாதுகிளந்து செல்லும் பரிமேலழகியார் எளிதுணரப்படும் அன்மொழித்தொகைகளை அவ்வாறியாண்டுங் கிளந்துரையாது வேண்டுழி ஒரோவிடத்து மொழிவராகலின், அவை யிரண்டும் வேறேயென்றல் அவர்க்குத் துணிபேயாமென்க. ஆகுபெயரைப் பிறழாமல் நெறிப்பட மொழியும் அவ்வுரைகாரர் அன்மொழித்தொகையினையும் அங்ஙனம் உரையாததென்னையெனின்;—ஆகுபெயர் அறத்துப்பால் பொருட்பால் காமத்துப்பால் என்னும் மூன்றுபாற்கண்ணும் இடையிடையே விராய் வாக்கியப்பொருட்குப் பெரிதுமுபகாரமுடைத்தாய் அரிதுணரப்படுநிலையிற் செறிந்துநிற்றலால் அதனையாண்டும் ஒழியாது கூறுவர். அன்மொழித்தொகை அதுபோலாது

ஏனையிருபாற்கண்ணும் அருகிய வரவிற்றாய்க் காமத்துப் பாலிற் புனைவு பொருணுதலி எளிதுணரப்படும் பெற்றித்தாய் ஆண்டாண்டு நிலையுதலின் வேண்டுமிடத்தன்றிக் கிளந்துகூறிற்றிலர். இதனைச் சண்முகம்பிள்ளை தெளிவுற விளக்கினராகலின் ஈண்டதனை விரித்துக் கூறுதல் வேண்டா. பரிமேலழகியார் கருத்துணராது அவர் ஆகுபெயர் அன்மொழித்தொகை யிரண்டனையும் ஒன்றென்னுங்கருத்துடையர் எனக்கூறிய கணேசையருரை ஒருசிறிதும்பொருந்தாது. அதுநிற்க.

இனிப்பரிமேலழகியார் 'கனங்குழை' அன்மொழித்தொகையாதல் இனிதறிந்தவழியும் அவ்வாறுரையாது அதனை ஆகுபெயர் என்றுகூறியது மயங்கக் கூறலாமெனின்;— அற்றன்று, அன்மொழித்தொகையாய்நின்ற 'கனங்குழை' என்பதே பின் ஆகுபெயராய்த் தலைமகள் உருவு முதலியவற்றைக் குறித்ததென்பது பரிமேலழகியார் கருத்தாகலின் என்க. அற்றேல், ஆண்டு ஒருமொழிக்கட் செயற்கைப்படுத் துணரநிற்பது என்னும் ஆகுபெயரிலக்கணம் சிதையுமாலோ வெனின்;— அறியாது கடாயினாய், அவ்வாகுபெயர் 'கனங்குழை' என்னுந் தொகைமேல் வந்ததன்று; மற்று அதன்புறத்துத் தொக்க 'மகள்' என்னுஞ் சொல்லின்கட் செயற்கைப் படுத்துணரத்தோன்றியதாமென்றுணர்க. இங்ஙனமாகலின் ஆகுபெயரிலக்கணஞ் சிதையுமாறு யாண்டையதென்க. அதுகிடக்க.

(இன்னும் வரும்.)

நாகபட்டினம்-வேதாசலம்பிள்ளை,
'ஞானசாகரப்' பத்திரிகாசிரியர்,
சென்னைக்கிறிஸ்டியன் காலேஜ் தமிழ்ப்பண்டிதர்.

ஸ்ரீ:

# பல்லவசக்கரவர்த்திகள்.

பண்டைக்காலத்தில் தென்னாட்டின்கண் சிறப்புற்றோங்கிய தமிழ்வேந்தர்கள் சேர, சோழ, பாண்டியரென்னும் மூவராவர். இவர்கள்தாம் தென்மொழியை வளர்த்துத், தலையிடைகடை யென்னும் முச்சங்கத்துப் புலவர்பலரைப் பெரிதும்போற்றிவந்தவர்கள். பேகன், நள்ளி, பாரிமுதலாய சிற்றரசர் நீங்கலாக, சங்கமருவிய நூல்களிலும், ஏனைய நூல்களிலும் சிறப்பித்துப் பாடப்பெற்றுள்ள வேந்தர்கள் இம்மூவரே. அவ்வாறாயின், ஈண்டுப் பல்லவசக்கரவர்த்திகளைப்பற்றிக் கூறுவதற்குக் காரணம் யாதோவெனின்;—இகபரசாதனமாயும், வேதத்தின் விழுப்பொரு ளமைந்ததாயுமுள்ள தேவாரந் திருவாய்மொழி முதலாகிய சிற்சில தமிழ்நூல்களில் "மண்ணுலகங் காவல்பூண்ட வலிமையாற் பல்லவற்குத் திறைகொடா மன்னவரை மறுக்கஞ்செய்யும்பெருமை" என்றும், "பைம்பொன்னு முத்து மணியுங் கொணர்ந்து படைமன்னு பல்லவர்கோன் பணிந்த ......தில்லைச் சித்திரகூடம்" என்றும் சுந்தரமூர்த்தி நாயனாரும், திருமங்கையாழ்வாரும், வேறுசிலரும் பல்லவ சக்கரவர்த்திகளைப் புகழ்ந்திருக்கின்றமையால், அவர்கள் யாவர்? எங்குச் செங்கோல் நடாத்தியவர்? எக்காலத்திருந்தவர்? அவர்களின் மாட்சி எத்தன்மைத்து? என நாம் இங்கு ஆராயவேண்டுவது அவசியமாயிற்று.

ஒருகாலத்தில் உயர்நிலையடைந்து தென்னாடெல்லாந் தந்நாடாக்கி அரசுபுரிந்த இம்மன்னர்களின் சரிதங்களை ஒழுங்குபெறக் கேட்டாருமில்லை: உரைத்தாருமில்லை. சரித்திரமென்பது நம்நாட்டாருக்குச் சற்றேனும் உளநாட்டத்தகாத கலைகளில் ஓர்பகுதியாக விருந்தது. ஐரோப்பியபண்டிதர்கள் பகர்வதுபோல, நம்நாட்டுப்புலவர்கள் உண்மை காணுதலை முக்கியமாகக்கொள்ளாது, மனத்திலுதித்தவாறு, தங்கள் கல்வித்திறத்தை வெளியிடுவதே பொருட்டாக எழுதிவைத்த புராணங்கள்தாம் இக்காலத்துள்ளன. சோழகுல பாரம்பரியத்துக்குக் கலிங்கத்துப்பரணி, விக்கிரமசோழனுலா முதலியன போலவும், பாண்டிய வம்சத்துக்கு ஆலாசியமான்மியம் போலவும்

சேரகுலத்துக்குக் கேரளமான்மியம் போலவும், பல்லவ சக்கரவர்த் திகட்கு ஒருநூலேனும் இருப்பதாகக் காணப்படவில்லை. ஸ்ரீவால் டர் எலியட் (Sir Walter Elliot) காலந் தொடங்கி—அஃதாவது சென்ற 60-வருடகாலமாக—-பூக்ஸ் (Rev. Foulkes)பிளீட் (Dr. Fleet) ஹுல்ட்ஷ்) (Dr. Hultzsch) முதலான ஆங்கிலேய பண்டி தர்கள், அருஞ்சேமதனங் கண்டெடுத்தாற்போலச் சில செப்பேடு களையும், சிலாலிகிதங்களையுந் தேடியெடுத்து, விஜயநகரத் தரசர் களின் பெருமையை ஸுவெல் (Mr. Sewell) பண்டிதர் வெளிப்படு த்தியதுபோற் பல்லவசக்கரவர்த்திகளின் சரித்திரத்தைப் பிரசுரஞ் செய்தனர். இம்மேதாவிகள் செய்துபோந்த பேருபகாரம் எக்கா லத்தும் நம்மனோரால் மறக்கற்பாலதன்று. இதனை, யாவருக்கும் பயன்படும்பொருட்டு என்னால் இயன்றவளவிற் சுருக்கமாக இங்கு எழுதத்துணிந்தேன்.

தமிழ்வழங்கும் நாடுகளிற் சேரம், சோழம், பாண்டிய நீங்க லாகத் தொண்டைநாடென்றும், தொண்டை மண்டலமென்றும் பெயர்வழங்கிய நாடொன்று முற்காலத்து விளங்கினமை யாவரும் அறிவர். அஃது இக்காலத்துத் தென்னாற்காடு, வடஆற்காடு, செங் கற்பட்டு ஜில்லாக்களாகும். பூர்வீகத்தில் இப்பிராந்திய முற்றும் ஆரணியமாயிருந்த தென்பதற்கு மேற்குறித்த ஜில்லாக்களின் பெயர்களே போதுமான சான்றாம். பின்னர் இதன் தென்பாலுள்ள சோழநாட்டரசர்கள் காடாகக் கிடந்தபடியை நாடாகத்திருத்திக் கச்சிமாநகரில் அரசு புரிந்துவந்தனர். சோழ குலத்தரசர்கள் உறை யூரிலும், புகாரிலும் செங்கோல் நடாத்திய நாளில், அவர்களில் ஒரு தொகுதியார் காஞ்சிமாநகரில் ஆட்சிபுரிந்தனர் என்பது, தொண் டைமான் இளந்திரையனைக் கடியலூர் உருத்திரங் கண்ணனார் பாடிய பெரும்பாணாற்றுப்படையால் அறியப்படுகின்றது. இக்காலம் ஏறக்கு றைய கி.பி.2-ஆம் நூற்றாண்டாகும்.

பண்டைக்காலத்தில் தொண்டை மண்டலம் குறும்பர் நிறைந்த நாடாயிருந்து, சோழவரசாட்சியின் கீழ் வந்தபின்னர், வேளாளர் கள் துளுவ தேயத்தினின்று போய்ப்புகுந்து ஆங்குக்குடியேறினதா கவும் தெரிகின்றது. இத்தருணத்தில் வடநாட்டிற் பல்லவர்கள்

சளுக்கிய வேந்தர்களால் முறியடிக்கப்பட்டுத் தென்றிசைநோக்கிச் சென்று தொண்டைநாட்டைக் கைப்பற்றிக் கொண்டனர். இவர்கள் முதன்முதல் ஈண்டு வந்தகாலம் சற்றேறக்குறைய கி. பி. ஐந்தாம் சதாப்தமாகும். இதுகாறும் வெளிப்பட்டுள்ள சிலாதாமிர சாஸனங்களாற் றெரிந்தவரை இவ்வரசர்களின் பாரம்பரியம் யாதெனில்;—

(1) உக்கிரதண்டன் என்ற லோகாதித்தன்
(2) ராஜசிங்கன் என்ற சிங்கவிஷ்ணு
(3) குணபாரன் என்ற மகேந்திரவர்மன்
(4) வாதாபி கொண்ட நரசிம்மவர்மன்
(5) மகேந்திரவர்மன்
(6) பரமேச்சுரவர்மன்
(7) நரசிம்மவர்மன்
(8) பரமேச்சுரவர்மன்
(9) நந்திவர்மன்
(10) நந்திவர்மப் பல்லவமல்லன்

இவர்கள் காலம் 'சுமார்' கி. பி. 6-முதல் 8-ஆம் சதாப்தம் வரையிலாகும். கச்சித்திருநகரிலும் இந்நாட்டுத் துறைமுகமான மாமல்லபுரத்திலும் மற்றுஞ்சிலவிடங்களிலும் இப்போது யாங்காண விளங்குகின்ற தேவாலயங்களையும், அதிவிசித்திர மாட மாளிகைகளையும் கட்டிவைத்தவர் இவர்களே. அன்றியும் இக்காலத்திற்றான் பார்ப்பனச்சிட்டர்கள் பல்லாயிரவர் கோதாவரி, கிருஷ்ணாநதிதீரங்களை விட்டகன்று தொண்டை மண்டலஞ் சேர்ந்தனர். இவர்களைப் பல்லவசக்கரவர்த்திகள் மிக்க அன்புடன் ஆதரித்துவந்தனரென்று செப்பேடுகளால் அங்கைக் கனிபோல் விளங்குகின்றது. நாயன்மாரிற் சிலரும், ஆழ்வார்களிற் சிலரும் எழுந்தருளியிருந்த காலமும் இதுவே. இவற்றை விரித்துப் பின்னர் விளக்குவோம்.

ஜாதியிற் பல்லவசக்கரவர்த்திகள் க்ஷத்திரியரென்றும் பாரத்துவாஜ கோத்திரத்தவரென்றும் இவர்களின் தென்மொழிப்பெயர் 'போத்தரசர்' என்றுந் தெரியவருகின்றன. வடமொழியிற் 'பல்லவம்' என்றாலும், தென்மொழியிற் 'போத்து' என்றாலும் பொருள் தளிர்

என்பதொன்றேயாம். இக்காலத்தில் எக்காரணத்தாலோ பல்லவ ரென்பதற்குத் தூர்த்தரென்றும், போத்தரசன் என்பதற்குச் சோம் பேறி யென்றும் பொருள் வழங்குவதாயின. 'வன்னியர்கள்' எனப் பகரும் பள்ளிகள், தாமே அக்கினிகுல க்ஷத்திரியர்களெனவும், பல் லவசக்கரவர்த்திகளின் வங்கிசத்தவர்களெனவுஞ் சொல்லித்திரிகின் றனர். சோழபாண்டியவரசரின் சந்ததியார்போலப் பல்லவர்களின் பின்னோரொருவரும் இக்காலத்தின்மையால் இதனுண்மை அறியக் கூடவில்லை. சோழன் சாதியிற் கள்ளனென்றும், பாண்டியன் சாதி யில் மறவனென்றும் ஒருசாரார் கொள்கை. இஃதுஉண்மையாயின் பள்ளிகள் பல்லவரெனக் கொள்ளவும் இடமுண்டு. ஆனாற் சிலா தாமிரசாஸனங்களால் வெளியானவளவிற் பல்லவர்கள் அவ்வளவு தாழ்ந்தவர்களாகத் தோற்றப்படவில்லை. இவ்வரசர்களின் மதம் சைவமும் வைணவமுங் கலப்புண்டிருந்தது. இக்காலத்தே அருக புத்தசமயங்களும் நடமாடின. சீனதேயத்து யாத்திரிகனான ஹியூ ந்த்ஸாங் என்பவர் கச்சிக்கு வந்தகாலத்தில் (அஃதாவது கி. பி. 7-ம் சதாப்தம்) அந்நகர்க்கண் நூறு போதியார் விகாரங்களும், பிண்டி யார் பள்ளிபலவும், எண்பது சைவவைஷ்ணவ ஆலயங்களும் இருந் தனவாகச் சொல்லுகின்றார்.

பல்லவம் என்ற தொண்டை மண்டலம் ஈராறு நாடுகளாகவும் எண்ணென்பது கோட்டங்களாகவும் வகுக்கப்பட்டிருந்ததென்றும், ஒருகாலத்தில் அதனெல்லை இருபெளவமும் கிருஷ்ணாநதியும் பொன் னியாறுமாக விருந்ததென்றும், பின்னர் எட்டு ஒன்பதாஞ் சதாப் தங்களிற் பன்னாட்டரசர்களும் ஒருங்கு திரண்டு படையெடுத்து வந்தமையாற் சிதறுண்டுபோயிற்றென்றுந் தெரியவருகின்றன. இந் நாட்டின் சிறப்பையும் ஊர்களின் வளனையும் எடுத்துரைக்க எம்மா லாவதன்று. சோழனுக்குப் புகார்போலவும், பாண்டியற்கு நெல் லூர் போலவும், (இக்காலத்தார் கடலூண்டி என்பர்) பல்லவனுக்கு மாமல்லபுரம் (மகாபலிபுரமன்று) கூலவாணிகநிறைந்த நகராயிருந் தது. நாளடைவில், தென்பாண்டிநாட்டை முந்நீருண்டதுபோல், இந்நகரைக் கடல் கொள்ள மேற்புறத்துநின்ற சிற்சில கட்டிடங்கள் மாத்திரம் மீந்தன.

இனிப் பல்லவசக்கரவர்த்திகளின் அருமை பெருமை முதலிய வற்றைச் சிறிதாராய்வோம். வடபால் சளுக்கிய வேந்தர்களும், தென்பால் சோழபாண்டியர்களும் இவர்கட்கு எக்காலத்தும் மாற்றார்களாயிருந்தார்கள். ஆனால் ஈழத்தரசர்கண்மட்டுந் தோழமைகொண்டிருந்தனர். பல்லவவமிசத்துக்குத் தலைவன் உக்கிரதண்டன் என்ற லோகாதித்தன்: இவன் "சுமார்" 1400-வருடங்களுக்கு முன்பு இருந்தவன்: வல்லபராஜனென சளுக்கிய வேந்தனென்ற ரணரஸிகனுடன் அநேகம் போர்புரிந்தவன்: இவன்றன் மகன் சிங்கவிஷ்ணு என்ற ராஜசிங்கன்: காஞ்சிநகரில் இப்போது கைலாசநாதர்கோயில் எனவழங்கும் இராஜசிம்மேச்சுரத்தைக் கட்டிவைத்தான். இவனுடைய மகன் குணபாரன் என்ற மகேந்திரவன்மன்: இவன் காலத்தில் (அஃதாவது கி. பி. 640-ம் ஆண்டில்) பல்லவநாடு தெற்கே திரிசிரபுரம் வரையிற் பரவியிருந்தது: சிராப்பள்ளியில் உச்சிப்பிள்ளையார் கோயில் கட்டியவன் இவனேயென்பர்: இவன் முதலில் விஷ்ணு சமயத்தவனாயிருந்து பின்னர்ச் சைவனானவன்: தென்னிந்தியாவில் நான்கு மலைக்கோட்டைகளைக் கட்டிவைத்தான். இவன்றன் மகன் நரசிம்மவன்மன்: சளுக்கியவேந்தனான புலிகேசியை (கி. பி. 610—644) வாதாபி என்ற பாடியில் வென்று, தான் முன்னமிழந்த நாடு நகர்களை மீட்டினான்: அறுபத்துமூவருள் ஒருவரான சிறுத்தொண்டநாயனார் இவ்வாதாபிப்போர்க்களத்திற் பல்லவன்பக்கல் நின்று போர் புரிந்து வென்றதாகச் சொல்வதுண்டு. இந்த நரசிம்மவன்மன் பேரன் பரமேச்சுரவன்மன்: வல்லபராஜனாகிய விக்கிரமாதித்தனுடன் வினை செய்து வெற்றியடைந்தவன். இவன் மகன் நரசிம்மவன்மன்: கொடியசைவன்: விஷ்ணுவெனில் நாவறுப்பவன்: ஆனால் பிராமணர்களை பொதுவாகக் காப்பாற்றிப் பேணிவந்தான்: வைஷ்ணவ ஆழ்வார்களுள் ஒருவரான திருமழிசையார் இருந்தகாலம் இதுவே யாகலாம். இவ்வாழ்வாரைக் கச்சியிலிருக்கவொண்ணாது பல்லவராஜன் வெருட்ட, அவருந் தொண்டைமண்டலநீங்கித் திருக்குடந்தைவந்து சேர்வாராயினர். இவன்றன் மகன் பரமேச்சுரவன்மன்: வைணவ சமயத்தவன்: கச்சிமாநகரில் வைகுண்டப்பெருமாள் கோயிலென வழங்கும் பரமேச்சுரவிண்ணகரத்தைக் கட்டுவித்தான்: இவன் அளித்த நன்கொடை எண்ணிலடங்காதனவாகும். இவனுடைய மகன் நந்தி

வன்மன்: பராக்கிரமசாலியாகாததால் வல்லபனான விக்கிரமாதித்தன் இவனைப் பலகான் முறியடித்துக் கச்சியைக் கைக்கொண்டு, நன்பொன்னும் முத்தும் மணியும் இராஜசிம்மேச்சுரமுதலாய தேவாலயங்களுக்கும் ஓத்தில் வல்லரான சதுர் வேதியர்களுக்கும் வழங்கினான்.

விக்கிரமாதித்தன் கச்சிமாநகரைவிட்டகல, தில்லைச் சிற்றம்பலத்தைப் பொன்னம்பலமாக்கிய ஹிரணியவர்மப் பல்லவராயன் வழியிற் றோன்றியவனும், மிக்க புஜபல பராக்கிரமசாலியும், வீரவைஷ்ணவனுமான நந்திவர்மப்பல்லவமல்லன் சக்கரவர்த்தியானான்: இவன் முடிசூடிய காலம் கி. பி. 710-க்குப் பின்னராகலாம். இவன் சோழபாண்டியரையும்; நிடதர்கோனான பிருதிவிவியாக்கிரனையும், இன்னும் அநேக அரசர்களையும் நெல்வேலி, மண்ணைக்குடி, கருவூர் முதலாய போர்க்களங்களிற் றோல்வியடையச் செய்தனன். நந்திக் கலம்பகத்தினும், பாரதவெண்பாவினும் புகழ்ந்து பாடப்பெற்றுள்ளவனும், தெள்ளாறு என்ற படைவீட்டிற் பகையெறிந்தவனும், நூற்றெட்டுத் திருப்பதிகளுள் ஒன்றான நந்திபுரவிண்ணகரத்தைக் கட்டுவித்தவனும், இவனாக விருத்தல் வேண்டும். இவனுடைய முதன்மைபெற்றசேனாபதி, வில்லிவலநாகுடையனான உதயசந்திரன் என்பான். பல்லவசக்கரவர்த்திகண்மீதுபொறாமைகொண்ட தென்னாட்டரசர் பலர் ஒன்றுகூடித் தொண்டைமண்டலத்திற் படையெடுத்து அநுபுரநகரை முற்றுகைசெய்ய, அதனைக்கேள்வியுற்ற உதயசந்திரன் விரைந்துசென்று அவர்களையெல்லாம் ஒருங்குசிதறுவித்தான். ஆலிநாடுடையாரான திருமங்கையாழ்வார் இந்நந்திவன்மன் சரித்திரத்தைப் பெரியதிருமொழிப் பரமேச்சுரவிண்ணகரப்பதிகத்துட் பரக்க விளக்கியிருக்கின்றார். மேலும் இதுவரையில் வெளிப்பட்டுள்ள கசகுடி, உதயேந்திரம் செப்பேடுகளாலும் இவற்றைத் தெளிவாய்க் கண்டுகொள்க.

நந்திவன்மப்பல்லவமல்லன் இறந்தபின்பு 'சுமார்' 50, 60 வருஷத்திய சரித்திரம் செவ்வையாய் விளங்கிற்றில்லை. தென்னாட்டு மூவேந்தரும், வல்லபவரசரும் பலாட்டியர்களாகிப் பல்லவர்களை நாசங்கண்டு அவர்கள் நாட்டையுங் கவர்ந்துகொண்டனர். ஆயினும், பல்லவநாட்டில் ஓர்பகுதியேனுநின்று பல்லவராயனென்ற பெயருஞ்

சிலகாலமாக வழங்கிவந்தது. சோழகுலத்தரசர்கள் தலைப்படவும், அவர்களில் வீரநாராயணசோழனும், ராஜராஜசோழனும் (கி. பி. 985; 1004.) சேரம், பாண்டியம், கொங்கு முதலான தென்னாடுகளைக் கைப்பற்றி ஏகசக்கராதிபதிகளாகிவிட, பல்லவதேசம் யாருமறியா வண்ணம் முற்றும் அழிந்தொழிந்தது. இக்காலத்து வேளாளன், வன்னியன், கள்ளன் முதலிய சிலசாதிகளிற் பல்லவராயனென்பது பட்டப்பெயராய் அடுத்து வழங்கப்படுவதேயன்றி, அப்பெயர்க் காரணத்தை விசாரித்தறிந்தவர் எவருமிலர்.

தொண்டை மண்டலமென்பது சோழவரசாட்சியின்கீழ் வந்த பின்பு 'ஜயங்கொண்ட சோழமண்டலம்' என மாறிற்று. பல்லவ சக்கரவர்த்திகள் கட்டிவைத்த தேவாலயங்கள் அழிக்கப்பட்டன. ஒருசில பூசையின்றி நாடுவாருமின்றிக் காட்டின்கண்ணும் கழனிக்கண்ணும் தபித்துக்கொண்டிருக்கின்றன. மேலும், இவற்றுக்கு உரியவாயிருந்த நிலங்களைச் சோழவரசர்கள் தாங்கள் எடுப்பித்த தளிகளுக்கு மாற்றித் தானஞ்செய்துவிட்டனர். பல்லவசக்கரவர்த்திகள் அடிபணிந்த புத்தேளிர் என்னபாவஞ் செய்தனரோ அறிந்திலோம்! தேவாலயங்களின்கதி இவ்வாறாயின், மானிடரது வாழ்வையுந் தாழ்வையும்பற்றி என் சொல்வது?

ம. ஸ்ரீநிவாஸையங்கார்.

# *சிலப்பதிகாரம் மணிமேகலை என்னும் இருபெருங் காப்பியங்களின் பிறப்பிடம் யாது?

இவ்வினாவின்விடை மலையாளமொழி நடைபெற்றுவரும் மலையாள நாடேயாம். அதனைக் †கேரளமென்றும், மலைவாரம் (மலபார்) என்றுங்கூறுவர். இக்கொள்கையை நிலைநிறுத்த, அக்காப்பியங்களிற்குள்ளே காரணங்கள் காண்க. அந்நூல்களிற் சிலப்பதிகாரத்தை கிறிஸ்து பிறந்தபின் முதல்நூற்றாண்டிலரசுபுரிந்திருந்த சேரமன்னனிளைஞன் இளங்கோவடிகளாக்கினதாக அதன் பதிகத்தாற் றெளிகின்றது. அதுபோலவே மணிமேகலைப் பதிகத்தாலந்நூல், கடைச்சங்கப்புலவர்களிலொருவராகிய கூலவாணிகன்சாத்தனாராற் சமைக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. மேலும், அப்பதிகங்களாற்றானே ஒருவரியம்ப, மற்றொருவர் கேட்டதாகவுங் காணப்படுகின்றது. ஆதலாலிவரிருவரு மொருகாலத்தவரென்பதுந் தவிரக்கல்வியின்கணுற்ற வாஞ்சையின்பொருட்டொருகூட்டத்தவராயிருந்தார்களென்பதுந் திண்ணம். சேரன் செங்குட்டுவன் தன்றேவி முதலானவர்களுடன் கூடி, மலைவளங்காணும்படி பேரியாற்றடை கரையிற் சென்றபோழ்து, சாத்தனவ்வரசன் பாசறையிலுறைந்திருந்ததாகவுங் குன்றக்குறவரரசனிடத்திற் றிருமாபத்தினியாகிய கண்ணகியின் வரலாற்றைத் தெரிவித்தபொழுது கொற்கையினிகழ்ந்தவற்றைச் சாத்தன் விரித்துரைத்ததாகவுஞ் சிலப்பதிகாரம் 25-ம் காதையால் விளங்குகின்றது. இக்காரணங்களால் அப்புலவர் சேரவரசகுடும்பத்தாலாதரிக்கப்பட்டவரென்பது கூடாமல் அவ்விராசாங்கப்புலவராகச் சிறப்புற்றுவாழ்ந்ததாகவு மெண்ணல்வேண்டும்.

---

* This is the substance of a lecture delivered in the Jubilee Hall, Trivandram, under the auspices of the Government Lecture Committee on the 21st November 1903.

† Keralam (கேரளம்) is the Kanarese form of Chera -|- alam (சேர -|- அளம்)

2. இனிப் பாவாணரிருவரும் இன்னவிடத்தில் இவ்விருகாப்பியங்களையும் வரைந்தார்களென்பதை ஆராய்வாம். சிலப்பதிகாரத்தில்,

'குணவாயிற் கோட்டத் தரசுதுறந் திருந்த
குடக்கோச் சேர லிளங்கோ வடிகட்கு'

என்றதில் இளங்கோவடிகளிருப்பிடங் கூறியிருக்கின்றது. அதிற் குணவாயிலென்பதற்குத் திருக்குணவாயிலென்பதோ ரூரென்றும், அது வஞ்சியின் கீழ்த்திசைக்கண்ணுள்ளதென்றும் அடியார்க்குநல்லாருரையிலெழுதப்பட்டிருக்கின்றது. ஆனால் வஞ்சியென்பதின்னவிடத்திலிருக்கும் வஞ்சியென்று மேலியம்பியவுரையாற் புலப்படவில்லை. இவ்விருகாப்பியங்களைப் பரிசோதித்தச்சிட்ட, கனம்பொருந்திய சுவாமிநாதையரவர்கள் சிலப்பதிகாரத்துடன் சேர்த்திருக்கும் அபிதானவிளக்கத்தில், வஞ்சியென்பது கொடுங்கோளூர், அல்லது திருவஞ்சைக்களமென்றும், மணிமேகலையோடு சேர்த்திருக்கும் அபிதானவிளக்கத்தில், கருவூரென்றும் விளம்பியிருக்கின்றார். இங்ஙனநேர்தற்குக் காரணமறிகிலமெனினும், ஐயரவர்கட்கு வேலை நெருக்கத்தால் இவ்விருவிளக்கங்களையு மொத்துப்பார்த்தற் கிடமில்லாமலிருந்ததென்று சந்தேகங்கூர்கின்றது. ஆகையால் வஞ்சியை, இன்னதென நாட்டும்பொருட்டுப் பின்வருவனவற்றைக்கூறுகின்றாம்.

3. திருவஞ்சைக்களத்திற்குங் கொடுங்கோளூருக்கு மொருமைல் தூரம். அவையிரண்டுங் கொச்சிக்குவடக்கே பத்துமைல் தூரத்திலிருக்கின்றன. அவை கொச்சியரசருடைய ஆளுகைக்குட்பட்டனவுமாய். ஆதலாலவை மலையாளமென்று கூறப்படுங் கேரள நாட்டிலுள்ளன. மேற்கூறியவா றவ்விருபட்டினங்களும் அடுத்திருப்பதாலும், அவற்றுள்ளே ஒன்று வஞ்சியென்னும் பெயருடைத்தாயிருப்பதாலும், இரண்டையுஞ் சேர்த்துத் திருவஞ்சைக்களமென்று தீர்மானிப்பாம். இனி நிச்சயிக்கவேண்டுவது, இருகாப்பியங்களிலுங் கூறியிருக்கின்ற வஞ்சி திருவஞ்சைக்களமோ அல்லது கருவூரோவென்பது.

4. சிலப்பதிகாரம் 25-வது காட்சிக்காதையில், செங்குட்டுவ மன்னன்,

 சிலப்பதிகாரமணிமேகலைகளின் பிறப்பிடம் யாது?

"மஞ்சுசூழ் சோலை மலைகாண் குவமெனப்
* * * * *
வஞ்சி முற்ற நீங்கிச் செல்வோன்
* * * *
நெடியோன் மார்பி லாரம் போன்று
பெருமலை விலங்கிய பேரியாற் றடைகரை
யிடுமண லெக்க ரியைந்தொருங் கிருப்ப"

(7, 9, 21, 22, 23-ம் வரிகளைநோக்குக)

என்றதனால், வஞ்சியினின்று சேரன் பரிவாரத்துடன் புறப்பட்டுப் பேரியாற்றுக்கரையை அடைந்ததாகக்காண்கின்றது; வஞ்சிக்கும்' பேரியாற்றுக்குமிடையில் எவ்விடத்தாவது தங்கியதாகக் காணவில்லை. அங்ஙனமிருக்கி னுங்காங்குள்ளவளங்களைத் திண்ணமாயுரைத் திருப்பர். எல்லாவரலாறுகளாலும், ஒருபகலில்வஞ்சியினின்று மேற்கூறிய ஆற்றங்கரையைக் குறுகினதாகக் கருதுகின்றேம். அந்நிலைமையிற் பிரயாணஞ்செய்ததூரம் பத்துமைலிலதிகமிராது. (திருவாழுங்கோட்டு) திருவாங்கூர் சமஸ்தானத்தில் பெரியாறென்றோராறுண்டு. அதுவும் வைகையும் மேற்குக்கணவாயிலோரிடத்துதித்து ஒன்று ஞாயிறுபடியுமிடம் நோக்கியும், ஏனையது ஞாயிறுபிறக்குமிடம் நோக்கியுஞ் செல்கின்றன. பெரியாறு கொச்சிக்காயலென்னு முட்கடலில் வாரப்புழையென்னுமூருக்குச் சமீபமாக வீழ்கின்றது. பாண்டியநாட்டைச் செழிப்பிக்கும்பொருட்டு, அநேககோடி திரவியஞ்செலவிட்டணையிடப்பட்டதும் இவ்வாற்றின்வாயைக் கட்டும் பொருட்டே. அதையிப்போது பெரியாறு புறஜெக்ட் (Periyar Project) என்று கூறுவர். ஆயிரத்தெண்ணூறு வருடங்களுக்கு முன், தென்னிந்தியாவிற்கு மேற்குப்பக்கத்திலிருக்குங்குட்டம், குடகம் முதலான எல்லாநாடுகளுஞ் சேரனுடைய ஆளுகைக்குள்ளிருந்தபடியா லிப்போழ்திருக்குந்தன்மைபோலல்லாது வஞ்சியும்பெரியாறுமோர்குடைக்கீழிருந்தன வென்பதற்கையமில்லை. செங்குட்டுவனொருகாற் கருவூரிலிருந்துபுறப்பட்டதாக வாதிக்கலாம். அந்நகரம், காவிரியும்பவானியுஞ் சேருமிடத்திருக்கின்றது. காவிரியைப் பற்றி இரண்டுநூல்களிலும் பலவிடத்தும் பெருமைபாராட்டிக் கூறி

யிருக்கின்ற முறைக்கு, அவ்வாற்றையடைந்திருந்தால், இளங்கோவடிகள்அதைக்கூறுதொழியார். மேலும் கருவூரிலிருந்து பெரியாறு கடலில்விழுமிடமாகிய செங்குட்டுவன் பாசறையடித்திருந்தவிடம் முந்நூறுமைல்தூரம். அஃது ஒருநாட்பிரயாணமன்றென்பதையுரைக்க வேண்டாம். அதனுலிருகாப்பியங்களிலுமியம்பியிருக்கும் வஞ்சிக்குச் சமீபமுள்ளது காவிரியல்லவென்பதும், அதுபெரியாறேயென்பதும் திண்ணம். பெரியாறென்பது ஆற்றின் பெயரல்லவென்றும், அளவாற் பெரியவாறென்றுமியம்புவாருமுளர். ஆயினுஞ் சிலப்பதிகாரத்தில் அப்பதந்தோன்றுமிடங்களின் முன்னும்பின்னும்ஆராயும் போழ்து ஒன்றன்பெயரைக் குறித்ததேயன்றி அதன்பிரமாணத்தைக் குறித்ததல்லவென்று நிச்சயப்படும். இக்காரணங்களாற் சேரன் பாசறையடித்திருந்தவிடம் திருவாங்கூரிலிருக்கும் பெரியாற்றின் கரையே.

5. மேற்கூறிய கோட்பாட்டை நிலைநிறுத்த வேறேதுக்களுமுள. பெரியாற்றின் கரையிற், கோங்கு, வேங்கை, நாவல், கொன்றை முதலான மரங்களுளவாகவுந், திருமாபத்தினியாகிய கண்ணகி அவளர்விமை அதற்குச்சமீபமோர் வேங்கைமரத்தினீழலில் விட்டதாகவுங், குன்றக்குறவர் சேரனிடத்தி லதைத்தெரிவித்ததாகவும் மேலியம்பிய சிலப்பதிகாரம், 25-ம் காதையாற் காண்க. இதுகூடாமலரசன் பேரியாற்றங்கரையிலேகியிருக்குங்கால் மலைமாக்கள் பாதகாணிக்கை வைத்த செய்தி பின்வரும் வரிகளாலறிக.

யானைவெண்கோடு, மகிலின்குப்பையு
மான்மயிர்க்கவரியும், மதுவின்குடங்களுஞ்
சந்தனக்குறையுஞ், சிந்துரக்கட்டியு
மஞ்சனத்திரளு, மணியரிதாரமு
மேலவல்லியு, மிருங்கறிவல்லியுங்
கூவைநீறுங், கொழுங்கொடிக்கவலையுந்
தெங்கின்பழனுந், தேமாங்கனியும்
பைங்கொடிப்படலையும், பலவின்பழங்களுங்
காயமுங், கரும்பும், பூமலிக்கொடியுங்
கொழுந்தாட்கமுகின் செழுங்குலைத்தாறும்
பெருங்குலைவாழையினிருங்கனித்தாறு

கரு. சிலப்பதிகாரமணிமேகலைகளின் பிறப்பிடம் யாது?

மாளியினணங்கு, மரியின் குருளையும்
வாள்வரிப்பறழு, மதகரிக்களபமுங்
குரங்கின்குட்டியுங், குடாவடியுளியமும்
வரையாடுவருடையு, மடமான்மறியுங்
காசறைக்கருவும், மாசறுநகுலமும்
பீலிமஞ்ஞையு, நாவின்பிள்ளையுங்
காகைகோழியுந், தேமொழிக்கிள்ளையும்"

(சில—25-வது காட்சிக்காதை 37—54-வரிகள்)

6. திருவாங்கூர், கொச்சி இந்நாட்டரசர்கள், மலைவளங்காணும் பொருட்டேகுங்கால் இற்றைக்கும் மலைவேடர்களவரவர்கள்காணிகளின்கட்பெறும் பலவகைப்பட்ட அரிய பண்டங்களைப் பாதகாணிக்கை வைப்பதியல்பு.

கந்தமூல பதார்த்தங்களாயினும், உயிர்ப் பிராணிகளாயினும் தென்னிந்தியாவின் கிழக்குக்கரையிற் காண்பவை குடவாயிற்காணப்படும்; ஆயினும் பின்னரியம்பியதிசையிற் காண்பவையெல்லாங் கீழ்த்திசையிற் காணப்படா; ஒருகாற் காணப்படினு மொன்றிரண்டு காணப்படுமேயன்றி, எல்லாவற்றையுஞ் சேர்த்துக்காணலரிது. பேரியாற்றுக்கரைக்குச்சமீபங் கோங்கு, வேங்கை, கொன்றை, நாவல், அகில், சந்தனம், ஏலம், கூவை, தெங்கு, பலா, மா, வாழை, கமுகு, கரும்பு, வெங்காயம் முதலிய மரஞ்செடிகளும் மலர்வல்லிகளும், சிங்கம், யானை, வரிப்புலி, கரடி, குரங்கு, வரையாடு, மான், மரை, கஸ்தூரிமான், நாவி, நகுலம் முதலான நாற்காற் பிராணிகளும், மயில், வான்கோழி, கிளி முதலான பறவைகளுமுண்டென்று மேற்கூறிய பாவாற்காண்க. இப்போழ்தும் அவ்விடத்து, மேற்கூறிய கந்தமூலங்களுஞ், சிங்கமொழிந்த வேனையஜீவஜெந்துக்களுங் காணப்படுகின்றன. இவைகளெல்லாங் கிழக்குக்கணவாயிலோ, அதன் குணபாலோ ஒவ்வொன்றுய்ச் சிற்சிலவிடங்களிற் காணப்படினும், யாவுஞ்சேர்ந்தோரிடத்துக்காணப்படா. மேலுங்காணிக்கையிலடங்கியிருக்கின்ற ஏலவல்லியுங், கூவைநீறும் மலைநாட்டிற்கே உரிய செல்வம். ஏலமானது, அநேககாலமாக வனமடர்ந்த மேற்குக்கணவாய்க்குக் குடபாற் காணப்படுவதல்லது, வேறிடங்களிற் செழித்து மலியவில்லை. இப்பொழுது அதைச் சேலம், கோயம்புத்தூர் முதலியவிடங்களிற் செய்

கைப்படுத்துவதாக அறிகின்றும். கூவைநீறு இன்னதென்பதுசோழ பாண்டிய நாடுகளிலுள்ளவர்கட்குப் புலப்படாது. கூவையினிலை மஞ்சளிலை போன்றிருக்கும். அது கேரளக்காடுகளில் மிகவும் பலிக்கின்றது. அதன் கிழங்கையெடுத்து, வெயிலிலுலர்த்தி, அதினின்று மாவெடுத்து, அதைச்சீமைக்கனுப்பி, அஃது அவ்விடத்துச் சிலபிரயோகங்களுக்குட்பட்டபின்னர், பளிக்குக் குப்பிகளிலடைக்கப்பட்டு அரோரூட் (arrow root) மாவென்னும் பெயரும்பெற்று இந்தியாவிற்குத் திரும்பி வருகின்றது.

இக்காரணங்களாற் பேரியாறென்பது, 4-ம் வகுப்பிற் கூறிய ஆறென்றும், வஞ்சி, அதற்கடுத்துத் தென்இந்தியாவின் மேற்குக் கரையைச் சார்ந்த ஓர் நகரமென்றும் புலப்படுகின்றன.

7. இக்கொள்கையை நிலைநிறுத்த வேறுவழிகளுண்டோ வென்றுராய்வாம். சிலப்பதிகாரம் 23-வது கட்டுரைகாதையில்,

கருத்துறு கணவற் கண்டபி னல்ல
திருத்தலு மில்லே னிற்றலு மிலனெனக்
கொற்றவை வாயிற் பொற்றொடி தகர்த்துக்
கீழ்த்திசை வாயிற் கணவனொடு புகுந்தேன்
மேற்றிசை வாயில் வறியேன் பெயர்கென
விரவும் பகலு மயங்கினள் கையற்
றுரவுநீர் வையை யொருகரைக் கொண்டாங்
கவல வென்னு ளவலித் திழிதலின்
மிசைய வென்னுண் மிசைவைத் தேறலிற்
கடல்வயிறு கிழித்து மலைநெஞ்சு பிளந்தாங்
கவுணரைக் கடந்த சுடரிலை நெடுவே
னெடுவேள் குன்ற மடிவைத் தேறிப்
பூத்த வேங்கைப் பொங்கர்க் கீழோர்
தீத்தொழி லாட்டியேன் யான்........"

(சில—23-வது காதை 179—192-வரிகள்)

என்றதனாற் கொற்கையை அழற்படுத்திய பின்னர் திருமாபத்தினி தன்கைவளைகளைக் காளிகோவில்வாசலிற் றகர்த்துவிட்டு, "கீழ்த்திசை வந்தபோழ்து, என் கணவனுடன் வந்தேன், இங்ஙனம் மேற்றிசையேகும்போழ்து அவனில்லாது தமியேனானேன்" என்று

புலம்பி வைகையாற்றி னெருகரை வழியாய்ச்சென்று, குமரக்கடவு ளுடைய இருப்பிடங்களிலொன்ருகிய, மேற்குக் கணவாயின்கண் திருச்செங்கோட்டு மலையிலேறி, சேரமண்டலத்திலோர் வேங்கை மரத்தின்கீழாயினளென்று காணப்படுகின்றது.

(இன்னும்வரும்)

தா. பொன்னம்பலம் பிள்ளை,
M. R. A. S.

---

உ

# க வி ம ர பு.

கவிமரபென்பது கவிகளுக்குள்ளே தொன்றுதொட்டு வழங்கி வரும் நியமம். கவிமரபெனினும், கவிசமயமெனினும், கவிசம்பிர தாய மெனினும் ஒக்கும். இம்மரபு நாகரீக முதிர்ந்த பாஷைகளில் வெவ்வேறு வகை கொண்டுள்ளது. வடமொழியில் இக்கவிசம்பிர தாயத்தைப் பற்றிக் கூறும் நூல்கள் பலவாம். தென்மொழியினும், ஆரிய நூல்களிற் போலவே, இம்மரபுகள் பரக்கக் காணப்படுகின்றன வாயினும், அவற்றின் பல்வேறு வகைகளையும் நயங்களையும் விரித்து விளக்கும் நூல்கள் அம்மொழியில் அரியவாயுள்ளன. ஆதலின் அதன் கூறுபாடுகளை நம் நாட்டாரும் ஒருவாறு உணர்ந்து மகிழ்தற் பொருட்டு, காவியப்பிரகாசம்: அதனுரைகள், அலங்காரசேகரம், மந்தார மரந்தசம்பு முதலாய வடநூல்களில் விரித்தும் சுருக்கியுங் கூறப்பட்ட கவிமரபுகளை ஒருங்கு திரட்டி இச்'செந்தமிழ்' வாயிலாக வெளியிடுகின்றேன். இதனுட் காணப்படும் குற்றங்குறைகளைப் பெரி யோர் திருத்தியமைத்தருள வேண்டுகிறேன்.

வடநூலார் கூறும் பிரஸித்தி விருத்தம் என்னும் பொருட் குற்றமானது, 'இது பிரசித்தம்' எனவொருவன் மயங்கிப் பிரயோ கிக்கும் அப்பிரஸித்தமாம். அஃதாவது உலகவழக்கோடும், கவி வழக்கோடும் மாறுபட்டு நிற்பதென்க. ஆதலின், இக்குற்றம் நன்

னூலார் கூறிய உலகமலேயாமை யென்னும் அழகிற்கு மறுதலேயாவ தோடு, உலகப்பிரஸித்திமாறுபாடு கவிப்பிரஸித்திமாறுபாடென இருவகைப்படும்.

அவற்றுள், உலகப்பிரஸித்தி மாறுபாடென்பது—உயர்ந்தோர் வழக்கினுள் பிரஸித்தமானதோடுமாறுகொள்ளுதல்; அது 'திருமால் கையிற் கூரிய சூலமேந்திப் பொருதான் போர்க்களத்தில்' என வரும். உலகவழக்கினுட் சூலாயுதம் சிவபிரானுக்கும், சக்கரா யுதம் திருமாலுக்கும் பிரஸித்தமாதலின், இஃது உலகப்பிரஸித்தி மாறுபாடாம்.

கவிப்பிரஸித்திமாறுபாடு என்பது—கவிசம்பிரதாயத்துள் பிர ஸித்தமானதோடுமாறுகொள்ளுதல்; அஃது "அவள் முகம் ஆம் பலே யொத்தது" என வரும். கவிசம்பிரதாயத்துள் தாமரைக் கும் முகத்திற்குமேயன்றி ஆம்பலுக்கும் முகத்திற்கும் உவமம் அப் பிரஸித்தமாதலின், இது கவிப்பிரஸித்திமாறுபாடு.

(கடா):—அற்றேல், உலகப்பிரஸித்தி கவிப்பிரஸித்தி இரண்ட னுள் ஒன்றற்கொன்று விரோதமுள்வழி, யாது வலியுடைத்து?

(விடை):—பிந்தியது வலியுடைத்து, காப்பியத்தின்கண் அது வே பிரதானமாதலின்.

ஆகவே, ஒன்று உலகப்பிரஸித்தியொடு மாறுகொளினும், கவிப்பிரஸித்தியாக அமைந்திருக்குமாயின், அது குணமேயன்றிக் குற்றமன்றாம். அது "குறியிடநோக்கிச்சாருந் தலேமகளொருத்தி இரவில் நிலவெளிச்சத்திற் செல்லுகையில், திங்களத்தமனமடைய, அவ்விடத்து ஒருவன் வேந்தே! நின்புகழைப்பாட, அதனாலவளச்ச மின்றிக் காதலன்குறியிடம் சேர்ந்தாள்" என வரும். அரசனேக் குறித்ததான இக்கவிக்கூற்றில், வெண்மையாகிய பண்புக்கு இருப் பிடமாய உருவுடைமையும், நிலவுபோன்றொளிருந்தன்மையும் புக ழிற் கிருப்பவாகக்கொண்டது உலகவிருத்தமாயினும், அவை கவி சமயத்தாற்பெறப்பட்டனவாமயின் குற்றமின்றாம்.

அன்றியும் உலகப்பிரசித்தி கவிப்பிரசித்தி இரண்டனேடும் ஒன்று மாறுகொள்ளுமாயினும், அதனேக் கவிப்பிரசித்திவிருத்தமா

கக் கொள்வதன்றி உலகப்பிரசித்தி விருத்தமாகக் கொள்வதில்லை. அஃது "அவள் அசோகத்தைச் சிலம்புக்காலால் உதைக்க, அது தளிர்த்தது" எனவரும். மகளிரதுகாலுதைத்தலால் அசோகந்தளிர்த்தலென்பது உலகத்தின்கண்ணும் கவிமரபினுள்ளும் காணப்படாமையின் இஃது இருவகைப்பிரசித்தியோடும் மாறுபடுவதாயினும், (அவரது காலுதைத்தலால் அது) புஷ்பித்ததென்பதே யல்லது தளிர்த்ததென்பது மரபன்றாதலின் இது கவிப்பிரசித்திவிருத்தமாம்.

(தடை) :—அற்றேல், பூத்தலால் தளிர்த்தலும் நிகழவே நிகழக்கூடியதாகலின், தளிர்த்தலென்றதனாற்படுமிழுக்கென்னை?

(விடை):—இழுக்கில்லாவிடினும், அவ்வாறு கவிவருணனையின்மையின், அஃது அதற்கு விருத்தமாம்.

மற்றும், ஒன்று உலகப் பிரசித்தமாயமைந்து, கவிப்பிரசித்தியோடு மாறுகொளநிற்பின், அதுவும் கவிப்பிரசித்தி விருத்தமாம். அஃது "இளவேனிற்கண் சாதிபுட்பவாசனை மிகஇனிது" எனவரும். இளவேனிற்கண் சாதிபுஷ்பம் உண்மையாகவே உள்ளதாயினும், அதனை அக்காலத்தில்வருணித்தல் கவிமரபாகாமையின், இது கவிப்பிரசித்திவிருத்தமாமென்க.

இதுகாறும் கவிமரபினைப் பொதுவாய்பாட்டால் ஆராய்ந்து, இனிச் சிறப்புவாய்பாட்டால் அங்ஙனஞ் செய்யுழி, கவிமரபு—இல்லதுதன்னையுமமைத்தலும், உள்ளதுதன்னையுமமைக்காமையும், நியமத்தாலமைத்தலும், விகற்பத்தாலமைத்தலுமென நான்குவகைப்படும். அவற்றுள்;—

இல்லதுதன்னையுமமைத்தலாவது—ஒருபொருள் உண்மையாகவே இல்லையாயினும், அதனை உள்ளதுபோல வைத்துக்கூறுதல். அஃது "ஆகாயம், பழி, பாவமென்றவற்றிற் கருமை: அன்னப்புள், சிரிப்பு, புண்ணியமென்றவற்றில் வெண்மை: காதல், குரோதம், பிரதாபமென்றவற்றிற் செம்மை: பழி, பாவங்களில் திண்மை: பிரதாபத்தில் வெம்மை: மகளிரிடையிலும் புலப்படாத்தன்மை: ஆற்றிலும், கடலிலும், ஆம்பல் முதலியன. எப்பெற்றிய மலையிலும் இரத்தினங்கள்: எப்பெற்றிய நீரிலும் பாசி: எப்பெற்றிய நீர் நிலையிலும்

அன்னமாதிய பறவைகள்: ஆகாயகங்கையிலே நீரும், யானையும்: மாதரதுவயிற்றிலே மும்மடிப்பும்,உரோமரேகையும்:இவைபோல்வனவும் ஆகியவற்றை வருணித்தல்" எனவும்,

"நிலவு குடங்களில் முகக்கப்படுகின்றது: சகோரங்கள் நிலவினைப்பருகுகின்றன: அன்னங்கள் மாரிக்காலத்தில்மானதமென்னும் ஏரிக்குச்செல்கின்றன: சக்கரவாகங்கள் பேடுகளினின்று இரவிற் பிரிவுறுகின்றன: நிலவும் இருளும் கைகளால் வாரிஎடுக்கப்படுகின்றன" எனவும்,

"மகளிர்தீண்டப் பிரியங்குவும், அவர்வாயினின்று மதுவினை உமிழவகுளமும், அவர்காலாலுழக்க அசோகமும், அவர்கள் நோக்கத் திலகமும், அவர்தழுவக் குரவகமும், அவர்இனியசொற்கூற மந்தாரமும், அவர்மதுவுண்டு களித்துச்சிரிக்கச் சம்பகமும், அவர் வாயால்ஊத மாமரமும், அவர்பாட நமேருவும், அவர்முன்னே ஆடக் கர்ணிகாரமும் மலர்கின்றன" எனவும்வரும். இவ்வாறே மண்டலபுருடோத்தமனும்,

ஏடவிழ்மகிழ்சுவைக்க வெழிற்பாலைநண்புகூடப்
பாடலசிந்திக்கத்தேம் படிமுல்லைநகைப்பப்புன்னை
யாடநீள்குராவணைக்க வசோகுதைத்திடவாசந்தி
பாடமாப்பார்க்கவார்சண் பகநிழல்படத்தளிர்க்கும்.

எனத் தமிழ்க் கவிமரபுபற்றிக் கூறுதலையும் நோக்கிக்கொள்க.

(இன்னும்வரும்)

த. சுந்தரராஜசர்மா.

---

# புத்தகக் குறிப்பு.

நன்னூல் இலகுபோதம்;— இவ்வாறு பெயர்கொண்ட புத்தகமொன்று வெளிவந்தது, இலக்கணப்பயிற்சி விரும்பும் மாணக்கர்க்கு இன்பம் பயக்குமென்றெண்ணுகின்றேம். இது பெயரளவிலன்றி, அத்துறைச்செல்வோர்க்கு இலக்கணஞானம் எளிதிற்பெறும் வழிகளை நன்குவிளக்குவதாகும். இதனுள் 'மாணுக்கர் வருத்தமின்றிக்

## புத்தகக்குறிப்பு.

கற்குமாறு வினவும், வினவிற்குச் சூத்திரமும் சூத்திரபாகங்களும் பெரும்பாலும் விடையாக நிறுவியும், அவற்றோடு சூத்திரங்களையும் உரையையும் உதாரணங்களையுந்தந்தும், மயக்கந்தருவனவாயுள்ள இடங்களையெல்லாம் நன்குவிளக்கியும்' எழுதப்பட்டுள்ளது. இது காறும் வெளிவந்தவற்றினும் புதுவழியில் இந்நூலைமாணுக்கர் பொருட்டு ஆக்கியோர் யாழ்ப்பாணம் ஸ்ரீமத்-முத்துத்தம்பிப்பிள்ளையவர்கள். இவர் தமிழைப் பரப்புங்கருத்துக்கொண்டு பல்லாற்றானும் முயன்றுவருதற்குத் தமிழரெல்லாம் நன்றியறிதற்கடப்பாடுடையர். இவ்விலகுபோதம் எழுத்ததிகாரத்துக்குமட்டுங் காணப்படுதலால், ஏனைய பாகமும் விரைந்து வெளிவருமென்று எண்ணுகின்றேம். மாணுக்கரெல்லாம் இதனைப் பெற்றுக் கற்றுப் பயனடைவார்களாக.

குரோதிவருஷத்துத் திருக்கணித பஞ்சாங்கம் :—இது கும்பகோணம் ஸ்ரீ சங்கராசாரியஸ்வாமிகள் அநுமதிபெற்று ஸ்ரீமத். ஹே. கார்த்திகேய ஐயரவர்களால் வழக்கம்போல் இவ்வருடத்துக்குங் கணிக்கப்பட்டு வெளிவந்துள்ளது. இது சாஸ்திரீயமான திருக்கணித முறைப்பட்டதாதலால் நம்நாட்டு வைதிகசீலரும், பிறரும் இதனை வாங்கத்தவறாரென்பது திண்ணம். இப்பஞ்சாங்கத்துடன் சோதிடமுறைக்கு வேண்டிய பற்பல விஷயங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. சென்றவாண்டுப் பஞ்சாங்கத்தினும், இவ்வாண்டிற் புதியன சிலவுஞ்சேர்த்து ஐயரவர்கள் வெளியிட்டிருக்கின்றனர். ஏனைய நாட்டுப்பஞ்சாங்கங்கள் போலாது நல்லகாகிதத்தில் அழகாக இது பதிப்பிக்கப்பெற்றிருத்தல் இதனியற்கையழகைப் பின்னுஞ் சிறப்பிக்கின்றது.

சிவக்ஷேத்திராநுகூலம்:—இது சாலியமங்கலம் ஸ்ரீமத். சாம்பசிவநயினாரவர்களால் முயன்றெழுதப்பட்டது. சிவதலயாத்திரை செய்யும் பத்தியாளர்க்கு வழிகாட்டும் நண்பரைப்போலப் பேருதவி செய்யத்தக்கது. ஒருதலத்தினின்று மற்றொரு தலத்திற்குச் செல்லும் வழி, தூரவளவு, அங்கங்குள்ள விசேடம் முதலியவற்றோடு எழுதப்பட்டுள்ளது. உலகிற்குபகாரமாக இப்புத்தகம் வரைந்தது புகழும் புண்ணியமுமாம்.

ரா. இராகவையங்கார்,
பத்திராசிரியர்.

இங்ஙனங் கூறிமுடித்த மூவகை ஏதுப்போலிகளுள் அசித்த வகையால், ஏதுப்பொருளும், அதற்குப் பக்கப்பொருள் பற்றுக்கோடாதலும் நல்லநுமானத்தில் உபயவாதிகளுக்கும் வெளிப்பட்டிருக்கவேண்டுமென்பது பெறப்பட்டது.

அநைகாந்திகத்தால் ஏதுப்பொருள் சபக்கத்தில் உள்ளதாகியும் விபக்கங்களொன்றிலும் இல்லாதாகியும் தன் றுணிபொருளின் இன்மையைத் துணிதற்குரிய பிறிதோரேதுவின் நிலைக்களமொன்றினுமில்லதாகியும் இருத்தல் வேண்டுமென்பது பெறப்பட்டது.

விருத்தத்தால், ஏதுப்பொருள் தன்றுணிபொருளின் பொதுச்சிறப்புக்களிலொன்றையாயினும், தன்மியின் பொதுச்சிறப்புக்களிலொன்றையாயினும் விபரீதமாகத்துணிதற் குரியதல்லதாகி இருத்தல் வேண்டுமென்பது பெறப்பட்டது.

இதனால் இம்மூவகையிலக்கணங்களையுடைய பொருளை மூன்றனுருபுகொடுத்து நற்பக்கக்கூற்றையடுத்துக் கூறுவதே நல்லேதுவுறுப்பாமென வறிக.

இவ்விலக்கணநெறி பிறழ்ந்து கூறப்பட்ட அசித்த முதலிய ஏதுப்போலிகளெல்லாம் தருக்கநூலார் கூறும் ஐவகை ஏதுப்போலிகளுள் அடங்குகின்றன.

அவ்வைவகையேதுப்போலிகளுட் பெரும்பான்மை முற்கூறிய அசித்தம் முதலிய மூவகையேதுப்போலிவகையுள்ளும் சிறுபான்மை பக்கப்போலி திட்டாந்தப்போலி வகையுள்ளும் அடங்குகின்றன.

அங்ஙனம் அடங்குமாறு இனி அவற்றிற்குத் தனித்தனி எடுத்துக்காட்டும் உதாரணங்களைக்கொண்டு கண்டுகொள்க.

அவ்வைவகை ஏதுப்போலிகளின் பெயரும் வகையும் உதாரணமும் பின்வரும் வாயுறையுட் காண்க.

## ஐவகை ஏதுப்போலி வரையறை.

| எண் | | | பெயர் | பிரதிக்கினை | ஏது |
|---|---|---|---|---|---|
| ௧ | சவ்விய பிசாரம் | | சாதாரணம் | இம்மலை நெருப்புடைத்து | அறியப்படுதலால் |
| | | | அசாதாரணம் | சத்தம் அழிவில்லது | சத்தத்தன்மையுடைமையால் |
| | | | அநுபசங்காரி | எல்லாப்பொருளும் அழியத்தகுவது | அறியப்படுதலால் |
| ௨ | | | விருத்தம் | சத்தம் அழிவில்லாதது | காரியமாகையால் |
| ௩ | | | சற்பிரதிபக்ஷம் | சத்தம் அழிவில்லது | செவிப்புலனாதலால் |
| ௪ | அசித்தம் | | ஆச்சிரயாசித்தம் | ஆகாயத்தாமரை மணமுடையது | தாமரைத்தன்மையுடைமையால் |
| | | | சொரூபாசித்தம் | சத்தம் குணம் | கட்புலனாதலால் |
| | | சோபாதிகம் | துணிபொருளில் வியாபித்துஏதுவில்வியாபியாதது | இம்மலைபுகையுடைத்து | நெருப்புடைமையால் |
| | | | பக்கத்தன்மையால் வரைந்துகொள்ளப்பட்ட துணிபொருளில் வியாபித்து ஏதுவில் வியாபியாதது | வாயுக்காட்சிப் பொருள் | காட்சிப்பரிசமுடைமையால் |
| | | | ஏதுவால்வரைந்துகொள்ளப்பட்டஷி | அழிவுபாட்டபாவம் நாசமுடையது | உண்டாகற்பாலதாதலால் |
| | | | யாதாயினும் ஒரு தன்மையால் வரைந்துகொள்ளப்பட்டஷி | ஆடு மிருகம் | கொம்புடைமையால் |
| ௫ | | | பாதிதம் | நெருப்புச் சூடில்லது | திரவியமாதலால் |

இவற்றுட் சாதாரணமும் அசாதாரணமும் முன்னம் அநை காந்திகவேதுப்போலியுட் கூறப்பட்டனவேயாம்.

## அநுபசங்காரி.

அநுபசங்காரியாவது அந்நுவயதிட்டாந்தமும் வெதிரேகதிட்டாந்தமும் இல்லாதது. உதாரணம்- 'எல்லாப்பொருளும் அநித்தம் அறியத்தகுவதாதலால்' என்பதாம். இதன்கண் உலகிலுள்ள பொருள்களெல்லாம், ஐயுற்றுத்துணியும்பொருளுக்கிடமாகிய பக்கமாய் விட்டமையால், எல்லாப்பொருளினும் வேறான துணிந்தபொருளுக்கிடமாகிய திட்டாந்தப்பொருள்கூறிமுடித்தற் கிடமின்றி, இஃது அநுபசங்காரியாயிற்று.

உபசங்காரம்-முடிவுபேறு. அநுபசங்காரம் - முடிவுபெறுமை அதனையுடையது அநுபசங்காரியெனப்பட்டது.

இவ்வேதுப்போலி பின்புகூறப்படும் அசன்னுவுள்ளவுபயதன்ம விகலம், இன்மையினுபயாவியாவிருத்தி யென்னும் திட்டாந்தப் போலிகளுள் அடங்கும்.

## விருத்தம்.

விருத்தமாவது துணிபொருளுள்ள விடங்களொன்றினுமில்லதாகித் துணிபொருளில்லாவிடங்களெல்லா மிருப்பது. உதாரணம். 'சத்தம்அழிவில்லாதது, காரியமாகையால்' என்பதாம். இதனுட்கூறப்படும் ஏதுப்பொருளாகிய காரியப்பாடு அழிவில் பொருளொன்றினுமின்றி அழிவுடைட்பொருள்களில் வியாபித்திருத்தல் கண்டுகொள்க.

இது முன்புகூறப்பட்ட விருத்தவேதுப்போலியுள் தன்மச்சொரூப விபரீதசாதனமெனப் பெயர்பெற்றுள்ளது.

## சற்பிரதிபக்ஷம்.

சற்பிரதிபக்ஷமாவது துணிபொருட்கு மறுதலையாகிய துணிந்தபொருளைச் சாதிக்கும் பிறிதோ ரேதுவையுடைய ஏதுவாம். உதாரணம். 'சத்தம் நித்தியம், செவிக்குப்புலனாகலின்: யாது யாது செவிக்குப்புலனாவது அது அது நித்தியம், சத்தத்தன்மைபோல' என்பதாம்.

இதனுள் துணிபொருள்-சத்தம்நித்தியமாதல். அதற்கு மறுதலையாகிய துணிந்தபொருள்-சத்தம்அநித்தியமாதல். அதனைச்சாதிக்கும் வேறோரேது-சத்தம்காரியமாதல். அதனைச் சத்தத்தின்கண்ணுடைத்தாயிருத்தலால் இது சற்பிரதிபட்சமாயிற்று.

காரியமாதல்சத்தத்தின்கண் அநித்தியஞ்சாதிக்குமாறு. 'சத்தம் அநித்தியம்; காரியமாதலால், யாதுயாது காரியம் அதுஅது அநித்தியம், குடம்போல' என அந்நுவயமும்; 'யாதுயாது அநித்தியமன்று (நித்தியம்) அது அது காரியமன்று, ஆன்மாப்போல'என வெதிரேகமும் உடையதாகிவரும்.

இவ்வேதுப்போலி முன்புகூறப்பட்ட அநைகாந்திகவகையுள் விருத்தவியபிசாரி எனப் பெயர்பெற்றிருக்கிறது.

## ஆச்சிரயாசித்தம்.

இது முன்புகாட்டப்பட்ட அசித்தவேதுப்போலிவகையுட் கூறப்பட்டதேயாம்.

## சொரூபாசித்தம்.

இது முற்கூறப்பட்ட அசித்தவேதுப்போலிவகையுள் உபயாசித்தம், அந்நியதராசித்தம், சித்தாசித்தம் என மூன்றுவகையாகப் பிரித்துரைக்கப்பட்டிருக்கிறது.

## சோபாதிகம்.

சோபாதிகமாவது உபாதியுடன் கூடிய ஏது. (க) உபாதிதுணிபொருளுள்ளவிடங்களிற் றப்பாதிருப்பதொன்றைப் பிரிந்துமிருத்தலும், (உ) பக்கத்தன்மையால் வரைந்து கொள்ளப்பட்ட விடங்களில் தப்பாதிருப்பதொன்றைப் பிரிந்து மிருத்தலும், (௩) ஏதுவால் வரைந்துகொள்ளப்பட்ட துணிபொருளுள்ள விடங்களில் தப்பாதிருப்பதொன்றைப் பிரிந்துமிருத்தலும், (௪) யாதாயினுமொரு தன்மையால் வரைந்துகொள்ளப்பட்ட துணிபொருளுள்ள விடங்களிற்றப்பாதிருப்பதொன்றைப் பிரிந்துமிருத்தலும் என நான்கு வகைப்படும்.

இந்நால்வகையுபாதிகளையுமுடைய சோபாதிக ஏதுப்போலிகளுக்கு முறையே உதாரணம் வருமாறு.

முதலாவதற்கு உதாரணம். 'இம்மலை புகையுடைத்து, நெருப்புடைமையால்' என்பதாம். இதனுட்கூறப்படும் துணிபொருள் புகையுடைமை, அஃதுள்ள விடங்களிற்றப்பாதிருப்பதொன்று, நெருப்புக்குண்டாகிய ஈரவிரகின் கூட்டம்; அதனை, ஏதுப்பொருளாகிய நெருப்புடைமை சிவக்கக்காய்ச்சிய இரும்பிற் பிரிந்தும் இருத்தலால் இது துணிபொருளுள்ளவிடத்துத் தப்பாதிருப்பதொன்றைப் பிரிந்துமிருப்பதென்னும் சோபாதிகமாயிற்று. இதுமுன் கூறப்பட்ட அநைகாந்திகவகையிற் சபக்ஷைகதேசவிருத்திவிபக்ஷவியாபியாகக் காணப்படுகிறது.

௨-ஆவதற்கு உதாரணம். 'வாயு காட்சிப்பொருள்; காட்சிப்பரிசமுடைமையால்' என்பதாம். இதனுட் பக்ஷப்பொருள்வாயு; அதன்றன்மை புறப்பொருளாதல்; அதனால் வரைந்துகொள்ளப்படும் துணிபொருள் - புறக்காட்சிப்பொருள் (பிருதிவி, அப்பு, தேயுக்கள்) அவற்றுள் தப்பாதிருப்பது உற்பூதவுருவம்; அதனைக்காட்சிப் பரிசமாகிய ஏதுப்பொருள் வாயுவின்கட்பிரிந்துமிருத்தலால், இது பக்ஷத்தன்மையால் வரைந்து கொள்ளப்படும் துணிபொருளுள்ள விடங்களிற் றப்பாதிருப்பதொன்றைப் பிரிந்துமிருப்பதாகிய சோபாதிகமாயிற்று.

இது முற்கூறப்பட்ட தன்மவிசேடவிபரீதசாதனமாகக் காணப்படுகிறது.

மூன்றுவதற்கு உதாரணம்:— 'அழிவுபாட்டபாவம் நாசமுடையது, உண்டாகற்பாலதாதலான்' என்பதாம். இதனுள்ஏதுப்பொருள் உண்டாகற்பாலதாதல். அதனால் வரைந்து கொள்ளப்படும் துணிபொருள் உண்டாகற்பாலதாகி நாசமடைதல். அஃதுள்ள விடங்களில் (உண்டாகி நாசமடைவனவற்றுள்) தப்பாதிருப்பதொன்று பாவப்பொருளாதல். அதனைப்பிரிந்தும் இவ்வேதுப்பொருள் அழிவுபாட்டபாவத்திலிருத்தலால் இஃது ஏதுவால்வரைந்துகொள்ளப்பட்டதுணி

பொருளுள்ள விடங்களிற் றப்பா திருப்பதொன்றைப் பிரிந்துமிருப் ப தென்னும் சோபாதிகமாயிற்று.

இது முற்கூறப்பட்ட தன்மிச்சொரூபவிபரீத சாதனமெனக்கா ணப்படுகிறது.

## பாதிதம்.

ஒரேதன்மியில் தன்றுணி பொருளின் மறுதலைப் பொருளைப் பிறிதோரளவை யாற்றுணிதற்கு மிடங்கொடுத்திருப்பது.

உதாரணம்:— 'நெருப்புச் சூடில்லது திரவியமாதலால்' என்ப தாம்.

இதனுள், தான் - திரவியமாதல் என்னும் ஏது. இதன் றுணிபொரு ள் சூடின்மை. அதன் எதிர்மறைப் பொருள் சூடு. அதனை ஒருதன்மி யாகிய நெருப்பில் நெருப்புச்சூடுள்ள தெனத்துவக்கிந்திரியக் காட்சி யளவையாற்றுணிதற் கிடங்கொடுத்து நிற்றலால் இது பாதிதமாயி ற்று.

இவ்வேதுப்போலி முன்கூறப்பட்டபிரத்தியக்கவிருத்தம், ஆகம விருத்தம் என்னும் பக்கப்போலிகளுள் ளடங்குகின்றது.

---

## திட்டாந்தப்போலி.

இனித் திட்டாந்தப் போலி சாதன்மிய திட்டாந்தப் போலியும், வைதன்மிய திட்டாந்தப் போலியுமெனவிருவகைப்படும். அவற்றுள் சாதன்மிய திட்டாந்தப்போலி சாதனதன்மவிகலம் முதலிய ஐவகை யாம். அவற்றின்பெயரும் உதாரணங்களும்பின்வரும் வரையறையுட் காண்க.

# சாதன்மியதிட்டாந்தப் போலிவரையறை.

| எண். | பெயர். | | பக்கம். | ஏது. | திட்டாந்தம். | குறிப்பு. |
|---|---|---|---|---|---|---|
| க. | சாதனதன்மவிகலம். | | காற்றுப் பரிமாண முடையது. | திரவியமாதலால். | யாது யாது திரவியம் அது அது பரிமாணமுடையது நெருப்புப் போல. | ஆங்கிலரசாயன நூலுடையாரை நோக்கிய கூற்று. |
| உ. | சாத்தியதன்ம விகலம். | | புகைதிரவியம். | இயக்கமுடைமை யால். | யாது யாது இயக்கமுடையது அது அது திரவியம் நெருப்புப் போல. | ஷை |
| ந. | உபயதன்ம விகலம். | சன்னு. | புகைதிட்ப முடையது. | உருவமுடைமை யால். | யாது யாது உருவமுடையது அது அது திட்பமுடையது காற்றுப்போல. | நையாயிகரை நோக்கிய கூற்று. |
| | | அசன்னு. | காலம் திரவியம். | பரிமாணமுடைமை யால். | யாது யாது பரிமாணமுடையது அது அது திரவியம் ஆகாயம் போல. | ஆங்கில ரசாயன நூலுடையாரை நோக்கிய கூற்று |
| ச. | அநன்னுவயம். | | இம்மலைநெருப் புடைத்து. | புகையுடைமையால். | பாகசாலைபோல. | பொதுக் கூற்று. |
| ரு. | விபரீதான்னுவயம். | | இம்மலைநெருப் புடைத்து. | புகையுடைமையால். | யாது யாது நெருப்புடைத்து அது அது புகையுடைத்துப் பாகசாலைபோல. | ஷை |

## சாதன தன்மவிகலம்.

சாதனதன்மவிகலமாவது—சாதனதன்மம் தன்கண்ணுள்ளதாக வெளிப்படையில்லாத பொருளைத் திட்டாந்தமாகக் கூறுவது. உதாரணம். (ஆங்கில ரசாயன நூலுடையாரை நோக்கி) 'காற்றுப் பரிமாணமுடையது; திரவியமாதலால்; யாது யாது திரவியம் அது அது பரிமாணமுடையது: நெருப்புப் போல' என்பதாம். இதனுள் சாதனதன்மம் திரவியமாதல் (முதற்பொருளாதல்) அஃது ஆங்கில ரசாயன நூலுடையார்க்கு நெருப்பின்கண் வெளிப்படையின்மையால் (அவர் நெருப்பைத் திரவியமென்று கொள்ளாமையால்) அவரை நோக்கி நெருப்பைத் திரவியமெனக்கொண்டு திட்டாந்தமாகக் கூறுமிடத்து அது சாதனதன்மவிகலமாகும் எனவறிக.

மற்றும் இவ்வாறு கூறுவனவெல்லாம் இத்திட்டாந்தப்போலியாம். சாதனம்—ஏதுப்பொருள்; அது பக்கப்பொருளைப்பற்றித் தன்மமாய் நிற்றலால், அவ்வேதுப்பொருளே இங்குச் சாதனதன்மமென வழங்கப்பட்டது. சாதனமாகிய தன்மம் எனவிரியும். தன்மம் - தன்மை. இம்மலை நெருப்புடைத்துப் புகையுடைமையால் என்பதிலும் புகையுடைமையாகிய ஏதுப்பொருள் புகையுடையதெனப் படும்மலையாகிய பக்கப்பொருளின்றன்மையாயமைதல்கண்டுகொள்க.

இவ்வாறே பின்வரும் சாத்தியதன்மமென்பதற்கும் பொருளுரைத்துக்கொள்க. விகலம் - உறுப்பற்றது. (குறைவுடையது என்றபடி) சாதனதன்மத்தாற் குறைவுடையது சாதனதன்மவிகலமெனப் பெயர்பெற்றது. பின்வரும் சாத்தியதன்மவிகலம் என்பதற்கும், உபயதன்மவிகலம் என்பதற்கும் இவ்வாறே பொருளுரைத்துக்கொள்க.

சாத்தியசாதனங்களிரண்டும் திட்டாந்தப்பொருளுக்கு உறுப்பாகியமைதலால் அவ்வவ்வுறுப்பில்லாத திட்டாந்தப் பொருள்கள் அவ்வவ்வுறுப்பாற் குறைவுடையவாகிச் சாதனதன்மவிகலம், சாத்தியதன்மவிகலம், உபயதன்ம விகலம் எனப் பெயர்பெற்றனவாதலின், அவ்வப்பொருளை வழங்கும் கூற்றாகிய திட்டாந்தவுறுப்பும் சொற்பொருளொற்றுமைபற்றி அவ்வப்பெயரால் வழங்கப்படுமெனவறிக.

சுஅ சென்றக்காற் செல்லும்வா யென்னே விருஞ்சுரத்து
நின்றக்கா னீடி யொளிவிடா—நின்ற
விழைக்கமர்ந்த வேயே ரிளமுலையா ளீடில்
குழைக்கமர்ந்த நோக்கின் குறிப்பு.

எ-து. பொருள்வலித்த நெஞ்சிற்குத் தலைமகன் சொல்லிச் செலவழுங்கியது.

இ-ள். பொருளின் பொருட்டு நாமிவளை நீங்கிப்போயக்காற் போம் வகை யெங்ஙனேயோ? நெஞ்சே! மன்னிய அணிகட்குத் தக்க அழகையுடைய இளமுலையாளுடைய ஒப்பில்லாத குழைக்கமர்ந்த நோக்கின் குறிப்புக்கள் நம்முன்னே வந்து நீடியொளிவிட்டு இருஞ்சுரத்திடையே தோன்றி நின்றக்கால்; எ-று. (சு)

சுகூ அத்த நெடிய வழற்கதிரோன் செம்பாக
மத்தமறைந் தானிவ் வணியிழையோ—டொத்த
தகைகயினு லெஞ்சீறார்த் தங்கினிரா ணாளை
வகையினிராய்ச் சேறல் வனப்பு.

எ-து. இடைச்சுரத்துக் கண்டார் செலவு விலக்கியது.

இ-ள் வழிகளும் நெடிய: அத்தமலையின்கண்ணே அழற்கதிரோனுஞ் செம்பாகம் மறைந்தான்: இவ்வணியிழையோடு நீரும் எம்மோடொத்த தகையினுல் எஞ்சிறூரிலே இன்று தங்கினீராய் நாளை எங்களினீங்கிப்போதலழகு; எ-று. (எ)

எ௦ நின்னேக்கங் கொண்டமான் றண்குரவ நீழல்காண்
பொன்னேக்கங் கொண்டபூங் கோங்கங்காண்—பொன்னேக்கங்
கொண்ட சுணங்கணி மென்முலைக் கொம்பன்னாய்
வண்ட லயர்மணன்மேல் வந்து.

எ-து. புணர்ந்துடன் போய தலைமகன் தலைமகளை ஆற்றுவித்துக்கொண்டுபோவான் சொல்லியது.

இ-ள். நின்னுடைய நோக்கின்றன்மையைக் கொண்ட மான்களைப் பாராய்: குளிர்ந்த குரவநீழலைப்பாராய்: பொன்னினது காட்சியைக்கொண்ட பூங்கோங்குகளைப் பாராய்; பொன்னினது காட்சியைக் கொண்ட சுணங்கணிந்த மென்முலையையுடைய கொம்பன்னாய்! மணன்மேல் வந்து விளையாட்டை விரும்பாய்; எ-று. (அ)

எக அஞ்சுடர்நீள் வாண்முகத் தாயிழையு மாறிலா
வெஞ்சுடர்நீள் வேலானும் போதரக்கண்—டஞ்சி
யொருசுடரு மின்றி* யுலகுபா ழாக
விருசுடரும் போந்தனவென் றார்.†

எ-து. சுரத்திடைச் சென்ற செவிலிக்குத் தலைமகனையுந் தலைமகளை யும் கண்டார் சொல்லிய வார்த்தையைத் தாங்கள் கேட்டார்க்குச் சொல்லி யாற்றுவித்தது.

இ-ள். அழகிய மதிபோன்ற நீண்ட ஒளியையுடைய முகத்தாயிழை யும் எதிரில்லாத வெஞ்சுடர்நீள்வேலானும் இச்சுரத்தின்கண்ணே போதா க்கண்டு அஞ்சி இருசுடரும் ஒரு சுடருமின்றியே உதயம் பாழாம்வகை இரு சுடரும் அச்சுரத்தே போந்தன என்று கண்டார் சிலர் சொன்னூர்; எ-று.

எஉ முகந்தா மரைமுறுவ லாம்பல்கண் ணீல
மிகந்தார் விரல்காந்த ளென்றென்—றுகந்தியைந்த
மாழைமா வண்டிற்கா நீழல் வருந்தாதே
யேழைதான் செல்லு மினிது.

எ-து. சுரத்திடைச்சென்ற செவிலியைத் தலைமகளைக்கண்டார்சொல் லி ஆற்றுவித்தது.

இ-ள். இவள் முகம் தாமரை மலர், இவள் முறுவலையுடைய வாய் ஆம்பல் மலர், இவள் கண் நீலமலர், ஒன்றையொன்றெவ்வாது கடந்தார்ந்த விரல்கள் காந்தளரும்பு என்று கருதிக் காதலித்துப் பொருந்திய மாழைமா வண்டிற்குத்தக்க நீழலிலே வருத்தமின்றி நின்னுடைய ஏழை செல்லாநின் றாள் இனிதாக; எ-று. (௬௦)

எஙு செவ்வாய்க் கரியகட் சீறிற் கேளாதுங்
கவ்வையாற் காணாது மாற்றுது—மவ்வாயந்
தார்த்தத்தை வாய்மொழியுந் தண்கயத்து நீலமு
மோர்த்தொழிந்தா ளென்பேதை யூர்ந்து.

---

* 'யிலகு' எனவும் பிரதிபேதம்.

† இஃது இடைச்சுரத்துக் கண்டோர்கூறிய வார்த்தையைக் கேட்டோ ராகச் சிலர் கூறியது என்றார் நச்சினார்க்கினியநம். (தொல். அகத். ௬௦)

எ-து. முன்னொன்றுடன்போக்குவலித்துத் தலைமகனையுந் தலைமகளையும் உடன்படுவித்துப் பின்னை அறத்தோடுநிலை மாட்சிமைப்பட்டமையாற் றலைமகளைக் கண்டு தோழி உடன்போக்கு அழுங்குவித்தது.

இ-ள். செவ்வாயின்கட் டார்த்தத்தை வாய்மொழியைக் கேளாதுங் கரிய கண்ணின்கட் டண்கயத்து நீலங்களின் றன்மைகளைக் காணாதும் அவ் வாயம் ஆற்றுதொழிவதனை யோர்த்துப் பின்புடன்போக்கையொழிந்தாள் என்பேதை அலர்காரணத்தான் முன்புடன்போக்கை மேற்கொண்டு; எ-று.

எச புன்புறவே சேவலோ டேடல் பொருளன்று
லன்புற வேயுடையா ராயினும்—வன்புற்
றதுகா ணகன்ற வழிநோக்கிப் பொன்போர்த்
திதுகாணென் வண்ண மினி.

எ-து. காமம் மிக்க கழிபடர்கிளவி; நிலத்தாற்பாலை; ஒழுக்கத்தான் நெய்தல்.

இ-ள். புல்லியநிறத்தையுடைய பேடைப்புறவே! நின்சேவலோடேடல் நினக்குக்காரியமன்றால்; எங்காதலர் எமக்கன்புமிகவுடையாராயினும் அவர் மனநெகிழாது வலியரான தன்மையைப் பாராய்; அவர் தேரோடும்வந்து நீங்கிய வழிச்சுவடு நோக்கிப் பொன்னிறம் போர்க்கவந்த வண்ணமிதனைப்பாராய், இப்பொழுது; எ-று. (கஉ)

எரு எரிந்து சுடுமிரவி யீடில் கதிரான்
விரிந்து விடுகூந்தல் வெஃகாப்—புரிந்து
விடுகயிற்றின் மாசுணம் வீயுநீ ளத்த
மடுதிறலான் பின்சென்ற வாறு.

எ-து. மகட்போக்கிய தாய் சொல்லியது.

இ-ள். அழன்று சுடாநின்ற பகலோனது ஒப்பிலாக் கதிரான் மாசுணங்கள் முறுக்கிவிட்ட கயிறுபோலப் புரண்டழியும் அத்தம், விரிந்துவிட்ட கூந்தலையுடையாள் அடுதிறலான்பின் விரும்பிச்சென்ற வழி; எ-று. (கந)

எசு நெஞ்ச நினைப்பினு நெற்பொரியு நீளத்த
மஞ்ச லெனவாற்றி னஞ்சிற்று—லஞ்சிப்
புடைநெடுங் காதுறப் போழ்ந்தகன்று நீண்ட
படைநெடுங்கண் கொண்ட பனி.

எ-து. பொருள்வலித்த நெஞ்சிற்குச் சொல்லித் தலைமகன் செலவழுங்கியது.

இ-ள். என்னெஞ்சமே! இவளை ஆற்றுவிக்குஞ் சிலசொற்களைச் சொல்ல நினைக்கின்றாயாயின் இவளேதான் நெற்பொரியும் நீளத்தத்தைச் சொல்ல நினைப்பதற்குமுன்னே பிரிவினைபஞ்சிற்றால்; புடைநெடுங்காதுறப் போழ்ந்தகன்று நீண்ட படைநெடுங்கண்களும் பிரிவினையஞ்சிப் பனிகொண்டன: ஆதலான், நமக்கிவளைப் பிரிய முடியாது; எ-று. (கச)

எஎ வந்தாற்றான் செல்லாமோ வாரிடையாய் வார்கதிரால்
வெந்தாற்போற் றோன்றுநீள் வேயத்தந்—தந்தார்
தகரக் குழல்புரளத் *தாழ்துகில்கை யேந்தி
மகரக் குழைமறித்த நோக்கு.†

எ-து. வினைமுற்றிய தலைமகன் தலைமகளை நினைந்தவிடத்துத் தலைமகள்வடிவு தன்முன்னின்றற்போலவந்துதோன்ற அவ்வடிவை நோக்கிச் சொல்லி ஆற்றுவிக்கின்றது.

இ-ள். கொண்டணிந்து நிறையப்பட்ட தகரத்தையுடைய குழல்கள் அசையத் தாழ்ந்து துகிலைக் கையானே எந்தி மகரக்குழை மறித்த நோக்குடனே நீ வந்தால் யாம் போகோமோ? அரிய இடையினையுடையாய்! நீயிரங்க வேண்டா; எ-று. (கரு)

எஅ ஒருகை யிருமருப்பின் மும்மதமால் யானை
பருகுநீர் பைஞ்சுனையிற் காணு—தருகல்
வழிவிலங்கி வீழும் வரையத்தஞ் சென்றா
ரழிவில ராக வவர்.

எ-து. ஆற்றளெனக் கவன்ற தோழிக்கு ஆற்றுவல் என்பதுபடச் சொல்லியது.

இ-ள். ஒரு கையினையும் இருகோட்டினையும் மூன்றுமதத்தினையும் உடைய மால்யானைகள் பருகுநீரைப் பைஞ்சுனையின்கட் காணுவாய் மருங்கே வழிவிலங்கித் தளர்ந்துவீழும் வரைகளையுடைய அத்தத்தைச் சென்ற அவர் அவ்வழி இடையூறின்றி அழிவிலராக; எ-று. (கசா)

---

* 'தாழ்கலையை' எனவும் பிரதிபேதம்.

† இஃது உருவுவெளிப்பாடு. நின்னொடு போதுவேனென்று அவளை ஆற்றுவித்தது. திணை பாலையிற்பாலையென்றார்: நச்சினார்க்கினியர். (தொல். அகத். சo)

நாலடி யீரெண் கலையொரு முப்பது
கோலிய தொலியந் தாதி யாகும். (௯௬)

௨௬௬ ஈரொலி யாகிய வெண்ணான்கு கலையெனச்
சீரியற் புலவர் செப்பினர் கொளலே. (௯௭)

௨௬௭ வண்ணக மென்ப தொலியெனப் படுமே. (௯௮)

## ௨௦—யானைத் தொழில்.

௨௬௮ மூவகை நிலனு மூவகை நிறைவும்
பல்வகைத் தேயமு மெழுவகை யுறுப்பு
யங்கமும் வருணமும் யாண்டு மைவகைக்
கொலையு மிருவகை நடையு மைவகை
யுணர்வு முடையோர்ப் பேணலு முளப்பட
நண்ணிய வேளாண் பாவி னலம்பெற
வெண்ணி யுரைப்ப தியானைத் தொழிலே. (௯௯)

௨௬௯ கிரிசரம் வனசர நதிசர மென்றிவை
நிலைபெறு நிலனென நிறுத்திசி னோரே. (௧௦௦)

௨௭௦ உயரமு நீளமுஞ் சுற்று மளவினிற்
குறையா தியல்வது நிறைவெனப் படுமே. (௧௦௧)

௨௭௧ பல்வகைத் தேயங் கொல்களிறு பிறக்கும்
பல்வகைத் தேயமு மென்மனார் புலவர். (௧௦௨)

௨௭௨ பாத நாலுங் கையும்வா லதியுங்
கோசமு நிலனுறத் தீண்டுதல் குறியே. (௧௦௩)

௨௭௩ குலமெனப் படுவது பலவகை வருணமு
நலனுற வுரைக்கு நலத்த தென்ப. (௧௦௪)

௨௭௪ நலமிகு வாழ்நாள் பொலிவுற வியம்புதல்
யாண்டென மொழிப வியனெறிப் புலவர். (௧௦௫)

௨௭௫ கையுமுற் கூறுங் கடியபிற் கூறுங்
கூர்ங்கோ டிரண்டுங் கொலைத்தொகை வகையே. (௧௦௬)

௨௭௬ முன்ன மூன்றிய காற்குறி தன்னிற்
பின்னர்ப்பத மிடுவது தோரண மென்ப. (௧௦௭)

௨எஎ பிறழ விடுவது வக்கிர மதுவே
சாரிகை விகற்பமு மாகு மென்ப. (௧0அ)

௨எஅ நன்மை யியற்றலுந் தீமை யியற்றலும்
பற்றிய நன்மை தீமை நினைத்தலுங்
கயக்கறு கால நினைத்தலும் புலனே. (௧0௯)

௨எ௯ வழுவா துடையோ ரேவ லியற்ற
லுடையோர்ப் பேண லென்மனார் புலவர். (௧௧0)

மேல் நண்ணிய என்றதனுலாசிரியவடியாற் பாடுவாருமுளர்.

௨அ0 அகவலு முரித்தென வறைகுந ருளரே. (௧௧௧)

## ௨௧—வருக்கமாலை.

௨அ௧ மொழிக்குமுத லாகிய வெழுத்துக் கெல்லாம்
வருக்க முறைப்பது வருக்க மாலை. (௧௧௨)

## ௨௨—நாமமாலை, புகழ்ச்சிமாலை.

௨அ௨. * மைந்தர்க் காயின் வஞ்சிப் பல்வகை
நேர்ந்தவடி †மயக்க நாம மாலை. (௧௧௩)

௨அ௩ ஆடவர் திறத்து வஞ்சி யின்னெறி
நாடிய பாத மயங்க வைப்பி
னும மாலை மற்றது மடந்தையர்க்
காமெனிற் புகழ்ச்சி மாலை யாகும். (௧௧௪)

௨அ௪ அதுவே-செங்கலை வண்ணப் பாவு மியங்கும் ;
கோவூர் கிழார். (௧௧௫)

௨அ௫ வெள்ளடி யியலாற் புணர்ப்போர் குறிப்பிற்
றுள்ளா வியல்பது புகழ்ச்சி மாலை ;
சேந்தம்பூதனர். (௧௧௬)

## ௨௩—இன்னிசைத் தோகை.

௨அ௬ தொண்ணூ றேனு மெழுப தேனு
மின்னிசை தொடுப்பி னின்னிசைத் தொகையே. (௧௧எ)

---

* 'மாந்தர்க்' பி-ம்.

† 'மடக்கு' பி-ம்.

உ௬எ எண்ணிய வகையா னின்னிசை வெண்பாத்
தொண்ணூ றெழுபது தொடுப்பதத் தொகையே;
கோவூர் கிழார். (௧௧௮)

உ௪.—விருத்தவகை.*

உ௬அ பரிசிலே யானை †வாள்குடை வேல்செங்
கோலொடு நாடூ ருறுப்பி னகவல்
விருத்தம் பத்தென வேண்டினர் புலவர். (௧௧௯)

உ௫—ஐம்படைவிருத்தம்.

உ௬௯ சக்கரந் தனுவாள் சங்கொடு தண்டிவை
யைம்படை யகவல் விருத்த மாகும். (௧உ0)

உ௬—நாழிகைக்கவி.

௧௯0 ஈரிரண் டியாமத் தியன்ற நாழிகைச்
சீர்திகழ் வெண்பாப் பாடுநர் யாவரு
விருநான் கேழே ழிருநான் காமெனக்
கன்னன் முப்பது மெண்ணின ரினிதே. (௧உ௧)

உ௯௧ மன்னர் கடவுளர் முன்னிலே யாக
வன்ன கடிகை யென்னு மியல்பிற்
றுருகுநெறி யன்னவை நேரிசை வெண்பா.

முதல்யாமம் எழளவும் பாடி எட்டாவதில்யாமம்ஒன்றென்றும் இரண்டாம்யாமம் ஆறளவும்பாடி எழில் யாமம்இரண்டென்றும் மூன்றும்யாமம் ஆறளவும்பாடி எழில் யாமம்மூன்றென்றும் நான்காம்யாமம் எழளவும்பாடி எட்டில் யாமம்நான்கென்றும் பாடின் முப்பது வெண்பாவாம். (௧உஉ)

உஎ—நவமணிமாலே.

உ௯உ பாவே யினமே யென்றிவை யிரண்டு
மேவிய வகையது நவமணி மாலே. (௧உ௩)

உஅ—கைக்கிளேமாலே.

உ௯௩ ‡இரங்க வருவது மடங்கிய வொருதலே
யியைந்த நெறியது கைக்கிளே மாலே. (௧உ௪)

---

* பரி முதலியவற்றைப் பத்துப்பத்தாகக் கூறும் ஒன்பதுவகை விருத்தமும் அவ்வப்பெயரான் விளங்குமென்றுணர்க.

† 'வாளொடு வேறேர்' பி-ம்.

‡ 'இயங்க' பி-ம்.

உ.கூச தாயர் சேரிய ர்ரயர் தீங்குழ
றென்றல் சேமணி யன்றி றிங்கள்
வேலை வீணை மாலை கங்குல்
காம னங்கணை கண்வளர் கனவென
வெஞ்சிய நன்னிற வேனில் குயிலே
கொஞ்சிய கிள்ளை கொய்தளிர்ச் சேக்கை
பயிறரு நன்னலம் பாங்கர் பாங்கிய
ரியன்ற பருவர லென்மனார் புலவர். (கஉரு)

உகூரு முல்லை யசோகு மாந்தளிர் தாமரை
யல்லி நீல மைங்கணை யாகும். (கஉசா)

மயங்கிய என்றதனு ஓரினப்படுத்திப்பாடுவாருமுளர். பாடும்பொழுது மருட்பாவாற்பாடப்படும்: அல்லாதவழி ஆசிரியமும் வஞ்சியும்ஒழிய அல்லாத பாவானும் இனத்தானும் பாடப்படும். சிறுபான்மை ஆசிரியப்பாவானு மினத்தானும் பாடப்படும் எனக் கொள்க.

உக—அரிபிறப்பு.

உகூசா சேலே யாமை யேனஞ் சிங்கங்
கோல வாமனன் மூவகை யிராமர்
கரியவன் கற்கி யெனவரு கடவுளர்
புரிதரு தோற்றந் தெரிதரப் பராஅய்ப்
பாட்டுடைத் தலைவனைக் காக்க வேண்டி
யினமொழி நாட்டி யகவல் விருத்த
மொருப தியற்றுத லாழியோன் பிறப்பே. (கஉஎ)

௨0—அட்டமங்கலம்.

உகூஎ ஒருவனைக் காக்கவென் றிறைவனை யேத்திய
வெண்வகை யகவல் விருத்தம் புணர்த்த
னண்ணிய வட்ட மங்கல மென்ப. (கஉஅ)

உகூஅ இறைவனை யேத்திய வெண்வகை மங்கல
மறிதரும் பாவே யகவல் விருத்தம்;
சேந்தம்பூதனுர். (கஉக)

## ௩௧—இல்லறவெள்ளை.

௨௯௯ கலைதரு வண்ணமும் வெள்ளையு மொன்பா
னிலைபெறப் புணர்ப்பினஃ தில்லற வெள்ளை. (௧௩௰)

இதனுட் கலைதருவண்ணம் என்றதனால் வெண்கலிப்பா ஒன்றுனும் பாடுவாருமுளர். நிலைபெற என்றதனாற் சந்தவகை யொன்பதும் வெண்பா ஒன்பதுமாகப் பாடுவாருமுளர்.

## ௩௨—மங்கலவெள்ளை.

௩௦௦ சந்தமும் வெள்ளையுந் தருவன கற்புடை
மங்கல வெள்ளை வருவன வொன்பான். (௧௩௧)

௩௦௧ அதுவே, வெண்கலி தானும் வருதற்கு முரித்தே.
மாபூதனார். (௧௩௨)

௩௦௨ சந்தமும் வெள்ளையுந் தனித்தனி புணர்த்தலு
மந்தமில் புலவ ராமென மொழிப;
சீத்தலையார். (௧௩௩)

## ௩௩—தாரகைமாலை.

௩௦௩ இரண்டு பொருள்புண ரிருபத் தெழுவகைச்
சீரிய பாட்டே தாரகை மாலை. (௧௩௪)

## ௩௪—செந்தமிழ்மாலை.

௩௦௪ எப்பொரு ளேனு மிருபத் தெழுவகை
செப்பிய †நெறியது செந்தமிழ் மாலை. (௧௩௫)

பாவானும் இனத்தானும் பாடுவோரு முளர். நான்கு முதற்பாவானுதல் ஒருபாவி னினத்தானுதல் பாடுக என்பாருமுளர்.

## ௩௫—தாண்டகம்.

௩௦௫ மூவிரண் டேனு மிருநான் கேனுஞ்
சீர்வகை நாட்டிச் செய்யுளி னடைவர்
கடவுளர்ப் புகழ்வன தாண்டக மவற்று
ளறுசீர் குறியது நெடியதெண் சீராம். (௧௩௬)

௩௦௬ அறுசீ ரெண்சீ ரடிநான் கொத்தங்
கிறுவது தாண்டக மிருமுச் சீரடி
குறியது நெடிய திருநாற் சீரே;
பல்காயனார். (௧௩௭)

---

* 'வகையது' பி-ம்.

௩0எ மங்கல மரபின் மானிடர் கடவுளர்
தம்புக ழுரைப்பது தாண்டக வகையே. (௧௩அ)

௩0அ தாண்டக மானிடர் கடவுளர்க் குரித்தே:
மாபூதனர். (௧௩௯)

௩0௯ அடிவரை நான்கும் வருமெழுத் தெண்ணி
நேரடி வருவது தாண்டக *மாகும்.
சீத்தலையார். (௧௪0)

## ௬௫—பதிகம்.

௩௧0 ஆசிரி யத்துறை யதனது விருத்தங்
கலியின் விருத்த மவற்றி னுன்கடி
யெட்டின் காறு முயர்ந்த வெண்பா
மிசைவைத் தீரைந்து நாலேந் தென்னப்
பாட்டுவரத் தொடுப்பது பதிக மாகும். (௧௪௧)

## ௬எ—சீர்மெய்க்கீர்த்தி.

௩௧௧ சீர்நான் காதி யிரண்டடித் தொடையாய்
வேந்தன் மெய்ப்புக ழெல்லாஞ் சொல்லியு
மந்தத் தவன்வர லாறு சொல்லியு
மவளுடன் வாழ்கெனச் சொல்லியு மற்றவ
னியற்பெயர்ப் பின்னர்ச் சிறக்க யாண்டெனத்
திறப்பட வுரைப்பது சீர்மெய்க் கீர்த்தி. (௧௪௨)

௩௧௨ நிலைபெறு சீர்மெய்க் கீர்த்தியி னந்த
முரையாய் முடியு மெனவுரைத் தனரே;
கோவூர்கிழார். (௧௪௩)

## ௬அ—செருக்களவழி.

௩௧௩ தலைவன் செய்த நிலைபெறு புகழ்புனை
நேரிசை வெண்பா வின்னிசை வெண்பாப்
பஃறொடை வெண்பா மறக்கள வழியே. (௧௪௪)

௩௧௪ நேரிசை யின்னிசை பஃறொடை வெண்பா
போரினக் களவழி புகலப் படுமே. (௧௪௫)

---

* 'மென்ப'பி-ம்.

## ௩௯.—மறக்களவஞ்சி.

௩௧௫ குறள்சிந் தளவடி யகவ லடிவிராஅய்
வஞ்சிச் செய்யுளின் மன்னவர் மறக்கள
மெஞ்சா துரைப்பது மறக்கள வஞ்சி. (௧௪௬)

௩௧௬ இயங்குபடை மன்ன ரிகற்களம் புகழ்ந்த
மயங்கியல் வஞ்சி மறக்கள வஞ்சி. (௧௪௭)

## ௪௦.—செருக்களவஞ்சி.

௩௧௭ விருத்தவகை பத்தான் விளம்பு மதனைச்
செருக்கள மெனவே செப்பினர் புலவர். (௧௪௮)

## ௪௧.—ஆற்றுப்படை.

௩௧௮ புரவலன் பரிசில் கொண்டு மீண்ட
விரவலன் வெயிறெறு மிருங்கா னத்திடை
வறுமை யுடன்வரூஉம் புலவர் பாணர்
பொருநர் விறலியர் கூத்தர்க் கண்டப்
புரவல னூர்பெயர்கொடை பராஅ
யாங்குநீ செல்கென விடுப்பதாற் றுப்படை. (௧௪௯)

௩௧௯ ஓங்கிய வதுதா னகவலின் வருமே. (௧௫௦)

௩௨௦ புலவராற் றுப்படை புத்தேட்கு முரித்தே, (௧௫௧)

## ௪௨.—கண்படைநிலை.

௩௨௧ காலைபகன் மாலை யாழ்முறை யறத்திய
லமைச்சிய லாசிய லேனை யியலிசை
நாடகத்திய லோடு *நான்மறை
முறையே யெய்தினை யூழி வாழி
யினிய மகளிரோ டின்பத்துயில் கொள்கென்
†றிங்ஙன முரைப்பது கண்படை யாகும். (௧௫௨)

## ௪௩.—துயிலெடைநிலை.

௩௨௨ கண்படை மன்னவர் முன்னர்த் தண்பத
விடிய லெல்லை யியல்புறச் சொல்லித்

---

* 'நான்கு, முறைமுறை யெய்தினை' பி-ம்.
† 'றின்ன' பி-ம்.

தந்த திறையருந் தாராத் திறையரு
*மேத்தி நின்மொழி கேட்டினி தியங்க
வேண்டின ரித்துயி லெழூகென விளம்பி
னதுவே மன்னவர் துயிலெடை நிலையே. (கருரு)

சச.—விளக்குநிலை.

ருஉரு துளக்கமின் மன்னர்க் காம்விளக் குரைப்பது
விளக்கு நிலையென வேண்டினர் புலவர். (கருச)

சரு.—கடாநிலை.

ருஉச கொற்றவை தனக்குக் கொற்றவ ரெறியுங்
கடாநிலை யுரைப்பது கடாநிலை யாகும். (கருரு)

ருஉரு வடாஅதுறை கன்னிக்கு மன்னவ ரெறிந்த
கடாநிலை யுரைப்பது கடாநிலை யாகும்:
பெருங்குன்றூர்க்கிழார். (கருசா)

சசா—யாண்டுநிலை.

ருஉசா வையக மன்னவன் †மன்னுக பல்யாண்
டெய்துக வென்ப தியாண்டுநிலை யாகும். (கருஎ)

இது பெரும்பான்மை நேரிசை வெண்பாவாற் பாடப்பெறும். சிறு பான்மை எல்லாப்பாவானும் பாடப்பெறும்,

சஎ.—பறைநிலை.

ருஉஎ காவல ரினிதுறத் தேவர்காத் தளிக்கெனக்
கடவுளர் விழவினுங் கதிர்முடி விழவினு
நாடு நகரமு நலம்பெற வியம்பி
வருநெறி வஞ்சி வழங்கப் பற்றிய
மொழிவரத் தொடுப்பது பறைநிலை யாகும். (கருஅ)

சஅ.—அந்தாதித்தொகை.

ருஉஅ வெண்பாக் கலித்துறை வேண்டிய பொருளிற்
பண்பா யுரைப்பதந் தாதித் தொகையே. (கருகூ)

---

*'மேத்திநின் மொழிகேட் டினிதியங்க வேண்டின, ரித்துயி லெழு கென வியம்பி னதுவே, மன்னவ ரின்பத் துயிலெடை நிலையே.' பி-ம்.

† 'மன்னிய பல்யாண், டெய்துவ னென்பது' பி-ம்.

சஅ.—மருட்பா.

ஙஉகூ புறநிலை வாயுறை செவியறி வுறாஉவெனத்
திறமையின் மருட்பாச் செய்யுளின் வருமே. (கசூ0)

சகூ.—பாதாதி.

ஙங0 அகவடி யுகிரே விரல்புற வடியே
பரடே கழலே கணைத்தாண் முழந்தாள்
குறங்கே யல்குல் கொப்பூழ் வயிரதன்
வரையே யிடையே மயிரி னொழுக்கே
முலையுகிர் விரலே முன்கை யகங்கை
தோளிணை கழுத்தே முகநகை செவ்வாய்
மூக்கே கண்ணே காது புருவ
நுதலெனு மாறைந் துறுப்புட னிரண்டும்
பாத மாதியா வேண்டுதல் புணர்ப்பினஃ
தோதிய பாத மாதியா மென்ப. (கசூக)

ரு0.—பணைமுலைநயனம்.

ஙஙக பணைமுலை நயனம் பாங்கா மகவல்
விருத்தம் பத்தென விளம்பினர் புலவர். (கசூஉ)

ஙஙஉ ஆகிய கண்முலை யகவல் விருத்தம்:
பெருங்குன்றூர்க்கிழார். (கசூங)

ருக.—உழத்திப்பாட்டு.

ஙஙங புரவலற் கூறி யவன்வா ழியவென்
றகல்வயற் றொழிலை யொருமை யுணர்ந்தன
ளெனவரு மீரைந் துழத்திப் பாட்டே. (கசூச)

ருஉ.—குறத்திப்பாட்டு.

ஙஙச இறப்பு நிகழ்வெதிர் வென்னுமுக் காலமுந்
திறப்பட வுரைப்பது குறத்திப் பாட்டே. (கசூரு)

ஙஙரு குறத்திப் பாட்டு மதனோ ரற்றே. (கசூசூ)

ருங.—ஒருபாவொருபஃது.

ஙஙசூ வெள்ளை யாத லகவ லாத
றள்ளா வொருப தொருபா வொருபஃது. (கசூஎ)

### ருச.—இருபாவிருபஃது.

ங௩எ வெள்ளை யகவல் பின்னர் முறைவைத்
தெள்ளா தியல்வ திருபா விருபஃது. (கசுஅ)

ங௩அ ஒருபா வொருபஃது மிருபா விருபஃதுங்
கருதிய வெள்ளையு மகவலுங் காட்டினர். (கசுகூ)

### ருரு.—கோவை.

ங௩கூ கோவை யென்பது கூறுங் காலை
மேவிய களவு கற்பெனுங் கிளவி
யைந்திணை திரியா வகப்பொரு டழீஇ
முந்திய கலித்துறை நானூ றென்ப. (கஎ0)

ஙச0 களவினுங் கற்பினுங் கிளவி வகையாற்
றிணைநிலை திரியாச் செம்மைத் தாகி
நாட்டிய கலித்துறை நானூ றுரைப்பது
கோட்ட மில்லாக் கோவை யாகும். (கஎக)

ஙசக ஐந்திணை தழுவிய வகநிலைக் கோவை
தந்தநா னூறுந் தாங்கலித் துறையே. (கஎஉ)

### ருசு.—கணக்கு. (மேற்கணக்கு—கீழ்க்கணக்கு.)

ஙசஉ மேல்கீழ்க் கணக்கென *விருவகைக் கணக்கே. (கஎங)

ஙசங மேற்கணக் கெனவுங் கீழ்க்கணக் கென்வும்
பாற்படும் வகையாற் பகர்ந்தனர் கொளலே. (கஎச)

ஙசச அகவலுங் கலிப்பா வும்பரி பாடலும்
பதிற்றைந் தாதி பதிற்றைம்ப தீரு
மிகுத்துடன் றெகுப்பன மேற்கணக் கெனவும்
வெள்ளைத் தொகையு மவ்வகை யெண்பெறி
னெள்ள று கீழ்க்கணக் கெனவுங் கொளலே. (கஎரு)

ஙசரு ஐம்பது முதலா வைந்நூ றீறு
வைவகைப் பாவும் பொருணெறி மரபிற்
றெகுக்கப் படுவது மேற்கணக் காகும். (கஎசு)

---

* 'விதித்தனர் புலவர்' பி-ம்.

௩௪௬ அடிநிமிர் பில்லாச் செய்யுட் டொகுதி
யறம்பொரு ளின்ப மடுக்கி *யவ்வத்
திறம்பட வுரைப்பது கீழ்க்கணக் காகும். (௧௭௭)

௫௭.—தொடர்நிலைச் செய்யுள்.

௩௪௭ வித்தெண் டுளிகொடி தலைவனொடு மேவி
யொத்த வெள்ளை விருத்த மகவல்
வைத்த வொருதொடை கொச்சக வுறுப்பு
நடைபெற வருவது தொடர்நிலை யென்ப. (௧௭௮)

௩௪௮ வித்தே யெண்டுளி விருந்தியல் கொடியென
வொத்த மூவகை யிறைவனொடு பொருந்தி
யொழுகிய வெள்ளை விருத்த மகவ
லுரையொடு மிடைந்த பாட்டுடைக் கொச்சக
நடைபெற வருவது தொடர்நிலை வகையே. (௧௭௯)

௩௪௯ தொடர்நிலைச் செய்யுள் பாட்டுப்பல தொடுத்துத்
தலையிடை கடையென நுவலவும் படுமே. (௧௮௦)

௩௫௦ அவற்றுள்.—
தலையெனப் படுபவை மலைவின் றாகி
யறம்பொரு ளின்பம் வீடென விவற்றிற்
றிறந்தெரி மரபி னீங்கா தாகி
வென்றிகொ ளிருக்கை யென்றிவை யனைத்துஞ்
சந்தி யாகத் தந்துநிலை பெறுமே. (௧௮௧)

௫௮.—பாட்டு. (பத்துப்பாட்டு.)

௩௫௧ நூறடிச் சிறுமை நூற்றுப்பத் தளவே
யேறிய வடியி னாம் பாட்டுத்
தொடுப்பது பத்துப் பாட்டெனப் படுமே. (௧௮௨)

௩௫௨ அதுவே: அகவலின் வருமென வறைகுநர் புலவர்: (௧௮௩)

௫௯.—கடைநிலை.

௩௫௩ கடைநிலை யென்பது காணுங் காலைப்
பரிசி லுழப்புங் குரிசிலை முனிந்தோர்
கடையகத் தியம்புங் காட்சித் தென்ப. (௧௮௪)

---

*'யவ்வகை' பி-ம்.

௩௫௪ பரிசினீட் டித்த லஞ்சி வெறுத்தோர்
கடைநின் றுரைப்பது கடைநிலை யென்ப. (௧அ௫)

கடையெனினும் அங்கதமெனினு மொக்கும்.

௩௫௫ வலங்கெழு வேந்தர் வான்புகக் கவிஞர்
கலங்கித் தொடுப்பது கையறு நிலையே. (௧அ௬)

௩௫௬ வெற்றி வேந்தன் விண்ணக மடைந்தபின்
கற்றோ ருரைப்பது கையறு நிலையே. (௧அ௭)

௩௫௭ கலியே வஞ்சியிற் கையற வுரையார். (௧அ௮)

௩௫௮ மற்றவை வல்ல வினம்பிறி தொன்றினு
மத்தகு மரபி னடக்கினர் கொளலே. (௧அ௯)

இனவியல் முற்றும்.

பன்னிருபாட்டியல் முற்றிற்று.

உ

# விளம்பரம்.

## ஒருமுறை பாருங்கள்.

---

மதுரை கீழமார்க்கட்டுத்தெருவில் நம்முடைய ஜவுளிமாளிகையில் கொற்நாடு, கும்பகோணம், தஞ்சாவூர், ஆரணி, சேலம் காஞ்சீபுரம், பனாரசு, உள்ளூர் முதலிய தினுசுகளும் பங்காளத்திலிருந்து பலவிதமான நார்ப்பட்டு, வெண்பட்டு தினுசுகளும்; நூதனமாய் அச்சிடப்பட்ட புதுச்சேரித்துண்டுகளும்; பற்பல உபயோகமுள்ள நாகரீக ஜவுளிதினுசுகளும்; மொத்தமாகவும் சில்லறையாகவும் கறூர்விலையாக விற்கப்படும். துலை வியாபாரிகளுக்கு ஜவுளி தினுசுகள் வேண்டிய மாதிரியில் உடனேயும் பத்திரமாயும் தபால் வாலியூபேயபிள் மார்க்கமாய் அனுப்பப்படும். சாமான்களின் ஜாப்தா கேட்பவர்களுக்கு இனாமாக அனுப்பப்படும்.

கு. தெய்வசிகாமணி பாகவதர்,
டி. லட்சுமண பாகவதர்,

கரூர் ஜவுளிக்கடை மதுரை.

☞ தயவு செய்து தங்களுடைய சிநேகிதர்களுக்கு தெரிவியுங்கள்.

---

**திருக்கன்றாப்பூர்ப்புராண வசனம்.**—விலை அணா 4.

மதுரைப் புதுமண்டபம் புத்தகஷாப் மு. கருப்பணபிள்ளையவர்களிடத்தும் என்னிடத்தும் பெற்றுக்கொள்ளலாம். இங்ஙனம்,

அ. கோபாலையன்,

எழுத்தாளன், மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை.

மதுரைத் தமிழ்ச்சங்கப் பதிப்பிற்குச் சங்க அங்கத்தினர் செலுத்த

வேண்டிய வருட 'சந்தா' த்தொகையை

அன்புற்றனுப்பிய வித்வான்கள்.

---

| | | ரூ |
|---|---|---|
| 1. | மகா-ள-ள-ஸ்ரீ உ. வே. சாமிநாதையரவர்கள், தமிழ்ப் பண்டிதர், பிரஸிடன்ஸி காலேஜ், சென்னை. | 6 |
| 2. | ,, எஸ். கிருஷ்ணசாமி ஐயங்காரவர்கள், M. A. M. R. A. S. பங்களூர். | 6 |
| 3. | ,, ரெ. அப்புவையங்காரவர்கள், தமிழ்ப்பண்டிதர், இந்துஹைஸ்கூல், ஸ்ரீவில்லிபுத்தூர். | 6 |
| 4. | ,, தி. கோ. நாராயணசாமிப் பிள்ளையவர்கள், தமிழ்ப்பண்டிதர், சென்ட்ரல் காலேஜ் பங்களூர் | 3 |
| 5. | ,, எஸ். வி. கள்ளபிரான்பிள்ளையவர்கள், 'ஸப் மாஜிஸ்ட்ரேட்' சைதாப்பேட்டை. | 6 |
| 6. | ,, எ. ஜெ. தம்பிப்பிள்ளையவர்கள் M.R.A.S. கொழும்பு. | 6 |
| 7. | ,, ஐ. [illegible]ாமிநாதமுதலியாரவர்கள், தஞ்சாவூர். | 6 |
| 8. | ,, தி. ப. சிவராமபிள்ளையவர்கள், தலைமைத் தமிழ்ப் பண்டிதர், ஹிந்துகாலேஜ், திருநெல்வேலி. | 6 |
| 9. | ,, வி. சதாசிவச் செட்டியாரவர்கள், தமிழ்ப் பண்டிதர், எஸ். பி. ஜி. காலேஜ், திருச்சிராப்பள்ளி. | 6 |